(12)

# சேர். நிக்கலஸ் ஆட்டிகலே நேற்று மாலை காலமானார்


Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 46
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 15 முஹர்றம் 19 சனிக்கிழமை [28-3-70]



புதுவருடப்பிறப்பை முன்னிட்டு
யுனிக் – நாஷனல்
றேடியோக்கள்
விலை வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன.
V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்,


## பேராதனைப் பல்கலைக் கழக முன்னுள் உபவேந்தர்

கோட்டை, வெள்ளி
பேராதனைப் பல்கலைக் கழகத்தின் முன்னுள் உபவேந்தர் சேர். நிக்கலஸ் ஆட்டிகலே இன்று பிற்பகல் காலமானுர்.

சேர். ஆட்டிகலே பேராதனை பல்கலைக் கழகத்தின் முதலாவது உபவேதர் பதவி வகித்த இலங்கையர் என்ற புகழைப் பெற்றிருந்தார். அவர் இலங்கையின் செனட் சபையிலும் முன்னர் தலைவர் பதவி வகித்திருக்கிருர்.

பல்கலைக் கழக மருத்துவப் பீடத்தின் தலைவராகவும் பெண் நோய் இயல் நிபுணராகவும் ஆராய்ச்சித் துறை வல்லுனராகவும் அவர் விளங்கியிருக்கிருர்.

இலங்கை பௌத்த பிரமுரான சபையின் தலைவராகவும் அவர் விளங்கினுர். சேர். ஆட்டிகலே காலமாகும் போது அவருக்கு வயது 75.

சேர். நிக்கலஸ் ஆட்டிகலேயின் இறுதிச் சடங்குகள் 30-ம் திகதி மாலை 5 மணிக்கு கனத்தையில் இடம் பெறும்.

# "ஒற்றுமையை ஏற்படுத்தியதன் மூலம் நாடு முன்னேறியது

## உணவில் "முக்கால்வாசி தன்னிறைவு கண்டோம்"

## வெளிநாட்டு நிருபர்களுக்கு பிரதமர் அளித்த பேட்டி

கோட்டை, வெள்ளி

'இந் நாட்டில் வாழும் சகல மக்களுக்கிடையிலும் ஒற்றுமையையும் சௌஜன்ய உறவையும் ஏற்படுத்தியதன் மூலம்தான் நாட்டின் பொருளாதார நிலை ஸ்திரமடையவும் அமைதியாக நாடு முன்னேறவும் முடிந்தது.'

இவ்வாறு பிரதமர் திரு. டட்லி சேனநாயகா இன்று காலை பொரலெஸ்கமுவயிலுள்ள தமது வாசஸ்தலமான 'வூட்லண்ட்சில்' வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த ஒரு பேட்டியில் கூறினர்.

## பஞ்சாப்பில் புதிய மந்திரிசபை பதவியேற்றது

### பிரகாஷ்சிங் பாதல் முதலமைச்சர்

புதுடில்லி, மார்ச்28
பஞ்சாப் ராஜ்யத்தில் திரு பிரகாஷ்சிங்பாதல் புதிய முதலமைச்சராக இன்று பதவி ஏற்ருர். அவருடன் இரு மந்திரிகளும் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.

திரு குர்நாம்சிங் தலைமையிலான மந்திரிசபை வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து திருபதால் புதிய முதலமைச்சராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிருர்.

புதிய மந்திரிசபையில் ஜனசங்கிலிருந்து ஒருவரும் அகாலி தலத்திலிருந்து ஒருவரும் இடம்பெற்றுள்ளனர்.

புதிய மந்திரிசபை பதவி ஏற்பின்போது அகாலி தலைவர் சன்ட் பத்தேசிங்கும் வந்திருந்தார்.

இந்துக்கள்-சீக்கியர்களுக்கிடையுல் சௌஜன்ய உறவைவளர்ப்பதே தமது மந்திரிசபையின் முககியநோக்கமாக இருக்கும்' என்றுபுதிய முதலமைச்சர் தெரிவித்திருக்கிருர்.


## 'சங்கிலியம்' வெளிவருகிறது

'ஈழநாடு' நடாத்திய காவியப் போட்டியில் முதற் பரிசு பெற்ற காவியம்.

சாகித்தியமண்டலப் பரிசு பெற்ற கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை படைத்த வீர காவியம்.

யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனின் வரலாற்றைக் கூறும் அரிய இலக்கியப் படைப்பு.


யெகோவாவின் சாட்சிகள்:

## மூன்று நாள் மாநாடு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி
யெகோவாவின் சாட்சிகளின் 3 நாள் மகாநாடு இன்று பிற்பகல் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் ஆரம்பமாகும் காவற்கோபுர சங்க பிரதிநிதியான டி. ஆர். மத்யூஸ்30-ம் திகதி சொற்பொழிவாற்றுவார்.

இம்மகாநர்ட்டில் கலந்து கொள்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளார்கள்.

இம்மகாநாட்டில் திரு. சி. ஏ. தரேகா, திரு. ஜி. எச். ஜி. எபிரகாம், திரு. ஏ. ஆர். பிரேநாட் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். இவர்கள் மெல்போர்ன் மகாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகளாவர்.

இன்று நடைபெறும் மகாநாட்டில் ஊழியப்பாடசாலை முக்கிய இடத்தை பெறும். 25 ஆண்டுக்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை யெகோவாவின் 25,000 சபைகளுக்கு மேற்பட்ட சபைகளில் பயிற்சி அளிக்கப்பட்ட சபைகளில் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. இந்தப்பாடசாலையில் எவரும் இலவசமாக பயிற்சிபெறலாம்.

1970-ம் ஆண்டுக்குரிய அட்டவணை ஒருபோதும் முன் ஒழுங்கு பண்ணப்படாது. வீட்டுக்குவீடு பிரசங்கித்தல், அமைப்பு, நிர்வாகம் ஆகியவற்றிற்கு உரிய அறிவுறுத்தல் நிகழ்ச்சிகளை கொண்டுள்ளன.

நாளைய நிகழ்ச்சி மாலை 5 மணிக்கு திரு. ஆர். ஈ. இராசையாவின் வரவேற்புபேச்சுடன் ஆரம்பமாகும். மேலும் இலங்கையின் வெவ்வேறு பாகங்களிலிருந்து வந்துள்ள பிரதிநிதிகளால் உரை நிகழ்த்தப்படும்.

சமீபத்தில் நடந்த "பூமியின் மீது சமாதானம்" என்ற அகில உலக மகாநாட்டில் ஐரோப்பாவில் மட்டும் 8,40,572 அங்கத்தினர் கலந்துகொண்டனர். யெகோவாவின் சாட்சிகளுடைய பிரசங்கவேலையில் 167 பாஷைகளில் இந்த வேலை நடக்கிறது. அவர்களுடைய ஊழியரின் தொகை உலகத்திலுள்ள எந்த மத அமைப்பிலும் பார்க்கக் கூடுதலானது. சமுதாயத்தின் மத்தியில் சீர்திருத்தும் வேலையை யெகோவாவின் சாட்சிகள் எந்த மத வேறுபாடோ மொழி வித்தியாசமோ இல்லாமல் செய்து வருகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகித்தியமண்டலப் பரிசு பெற்ற கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை படைத்த வீர காவியம்.

யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனின் வரலாற்றைக் கூறும் அரிய இலக்கியப் படைப்பு.

# சங்கிலியம்

22-4-70ல் நூல் உருவில் ஈழநாடு வெளியீடாக வெளிவருகிறது.

வாங்கத் தவறாதீர்கள்.

வைவளர்ப்பதே தமது மந்திரிசபையின் முக்கியநோக்கமாக இருக்கும் என்றுபுதிய முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

## நூல்நிலையம்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் கிராம சபையினர் பொது நிலையம் ஒன்றை அமைப்பதற்கு முடிவு செய்துள்ளனர். ஆயுள்வேத வைத்தியசாலை இருக்கும் இடத்தில் நூல்நிலையம் இயங்கவிருக்கிறது.

பொருளாதார நிலை ஸ்திரமடையவும் அமைதியாக நாடு முன்னேறவும் முடிந்தது.'

இவ்வாறு பிரதமர் திரு டட்லி சேனநாயகா இன்று காலை பொரலையிலுள்ள தமது வாசஸ்தலமான 'வூட்லண்ட்சில்' வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த ஒரு பேட்டியில் கூறினர்.

சென்ற மூன்று வருட காலங்களில் விவசாயத் துறையில் நாடு அடைந்துள்ள அபிவிருத்தி இதற்கு முன்னர் நடைபெருத நிகழ்ச்சியென்று பிரதமர் கூறினர்.

தாம் நாட்டின் பிரதமராகப் பதவியேற்றபோது இரண்டு முக்கிய அம்சங்களை எதிர்நோக்கிச் சமாளிக்க வேண்டியிருந்தது என்று கூறிய பிரதமர், ஒன்று இந்த நாட்டில் வாழும் மக்கள் சமூகங்களுக்கிடையில் வேற்றுமையும் பகைமை மனப்பான்மையும் நிலவியது ஒன்று என்றும் மற்றது நாட்டின் பொருளாதார சீர்குலைவு என்றும் சொன்னர். இந்த இரு அம்சங்களையும் தாம் மக்களின் ஒத்துழைப்புடன் சமாளித்து வெற்றியீட்டியுள்ளதாக திருப்தியுடன் கூறினர்.

உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கம் பெருவெற்றியென்றும் நாட்டு மக்களும் விவசாயிகளும் அரசாங்க ஊழியர்களும் மனப்பூர்வமாக அளித்த ஒத்துழைப்பே இதற்குக் காரணம் என்றும் பிரதமர் கூறினர்.

நாட்டின் அரிசித் தேவையில் 75 விகிதம் தன்னிறைவு பெற்றுள்ளதென்றும் பிரதமர் சொன்னர்.

நாட்டின் முன்னேற்றத்துக்குப் பொலிசாரும் ஆயுதப் படையினரும் அளித்த ஒத்துழைப்புக்கும் ஆதரவுக்கும் பிரதமர் நன்றி தெரிவித்தார்.



பட்ட சபைகளில் பயிற்சி அளிக்கப்பட்ட சபைகளில் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. இந்தப்பாடசாலையில் எவரும் இலவசமாக பயிற்சிபெறலாம்.

1970-ம் ஆண்டுக்குரிய கூடுதலான ... சமுதாயத்தின் மத்தியில் சீர்திருத்தும் வேலையை யெகோவாவின் சாட்சிகள் எந்த மத வேறுபாடோ மொழி வித்தியாசமோ இல்லாமல் செய்து வருகின்றனர்.

# "சரியானவழி எதுவோ அதைப் பின்பற்றுங்கள்"

## சரசாலை கூட்டத்தில் ஜி. ஜி.

மட்டுவில், வெள்ளி

"1947ம் ஆண்டுக்கும், 1956ம் ஆண்டுக்குமிடையில் இலங்கையில் தமிழ்மக்கள் தமிழ்க் காங்கிரஸ் தலைமையின் கீழிருந்த நிலைமையையும், 1956ம் ஆண்டுக்கும் 1970ம் ஆண்டுக்குமிடையில் தமிழ்மக்கள் சமஷ்டிக்கட்சியின் தலைமையின் கீழிருந்த நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்து எதிர்காலத்தில் சரியான வழியைப் பின்பற்றுங்கள்."

சரசாலையில் நடந்த தமிழ் காங்கிரஸ் பிரசாரக் கூட்டத்தில் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

வழக்கறிஞர் திரு. கே. கதிர்காமசேகரர் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

"அன்று 1947க்கும் 1956க்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ்மக்கள் எமது கட்சியையே முழுக்க முழுக்க நம்பியிருந்தார்கள். எம்மையே அதிகப்படியாக ஆட்சிமன்றம் அனுப்பினர்கள். எனவே எமது தமிழ்ப் பிரதேசங்களில் எல்லாம், எவ்வித பாகுபாடுமின்றி கமத்தொழில், கைத்தொழில் அபிவிருத்திகள் மேலோங்கியுள்ளன.

அப்படியான தமிழனின் பொற்காலமெனக் கருதப்பட்டுவந்த காலத்தில்தான், தமிழன் தமது ஆற்றலுக்கேற்ற அரசாங்க உத்தியோகத்தைப் பெறவும், எமது தமிழ்மொழியைச் சம அந்தஸ்தில் வைக்கவும், சிங்களவன் தமிழன் என்ற பாகுபாடின்றி, எம்முடன் பிறந்தோர் பன்னெடுங்காலம் வாழவும் முடிந்தது என்றால் அதைத் தமிழன் பொற்காலம் என்று கூறுவதில் எப்படித் தவறிருக்க முடியும்?

இந்நிலையில் 1956க்கும், 1970க்கும் இடைப்பட்ட காலத்தை எடுத்துப்பார்க்க வேண்டியது உங்கள் பொறுப்பு. இந்தக் காலத்தில்தான் தமிழினம் தமது தலைவிதியைச் சமஷ்டிக்கட்சியினரின் கையில் கொடுத்திருந்த காலம். இக்காலத்தில்தான் சிங்களவன், தமிழன் என்ற பேதம் காட்டி, வெறுப்புக்கும், பகைக்கும், பூசலுக்கும் சந்தர்ப்பம் உண்டான காலம்."

சாவகச்சேரி முன்னாள் எம். பி. திரு. வி. குமாரசாமி பேசுகையில் கூறியதாவது: எட்டே எட்டு ஆண்டுகளில் நான் ஆட்சி மன்றம் சென்ற காலத்தில் 40கோடி ரூபாக்களை எமது தொகுதி அபிவிருத்திக்கென ஒதுக்கச்செய்து, எனது தொகுதி அபிவிருத்திகளைச் செய்தேன்.

1950 ஜூலை மாதம் 27ந் திகதியில் நான் மகாவலி கங்கை நீர் உபயோகிக்கப் படவேண்டிய தேவையையும், முறைகளையும் விளக்கி ஒரு பிரேரணையை கொண்டு வந்தேன்.

திருவாளர்கள் வி. ஆனந்தசங்கரி, மோதிலால்நேரு, சிவநேசன், வ. யோகநாதன், திருமதி கே. தேவரத்தினம் உட்படப் பலர் உரைநிகழ்த்தினர்.

# "ஈழநாடு"

## பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் 'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

### உதவி வழங்கியோர்:

| | |
|---|---|
| நேற்றுவரை சேர்ந்த தொகை | 8141-47 |
| அனுதாபி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் | 15-00 |
| யாழ்ப்பாணம் இந்திர எண்ணை அரிசி ஆலை | 111-00 |

# 'மோகனம்பாள்' நாதஸ்வரத்தின் பெருமையைஉயர்த்திவிட்டாள்"

## 'நலம்தானு' சேதுசகோதரர் கூறுகிறார்கள்

— ஈ. கே. ராஜகோபால் —

'தில்லானு மோகனம் பாள்' நாதஸ்வரத்தின்பெருமையை உயர்த்திவிட்டாள். அந்தப் படத்தை எடுத்த டைரக்டர் ஏ. பி. நாகராஜனுக்கு நாம் நன்றி சொல்லிக்கொண்டேயிருக்கிறோம்' என்று நேற்றிரவு யாழ்ப்பாணம்வந்து சேர்ந்த 'தில்லானுமோகனம்பாள் புகழ் நாதஸ்வரக் கலைஞர்கள் மதுரை சேதுராமன் சகோதரர்கள் என்னிடம் கூறினர்கள்.

நேற்றிரவு 8 மணியளவில் தமிழகத்திலிருந்துவிமானத்தில் பலாலி விமானநிலையம் வந்து சேர்ந்தபோது, 'சேது' சகோதரர்களுக்கு ஈழத்து கலைஞர்களும், ரசிகப் பெருமக்களும் உள்ளங்கனிந்த அன்பையும் வரவேற்பையும் அளித்தனர்.

விமானத்திலிருந்து இறங்கிய சகோதரர்களை ஈழத்தின் தவில் வித்துவான்களான தெட்சணமூர்த்தியும், சின்னராசாவும், கணேசுவும் மாலைபோட்டுவரவேற்றதையடுத்து, ரசிகப்பெருமக்களின் மாலைகள் மளமளவென சேதுராமன் சகோதரர்கள் கழுத்துக்களை அலங்கரிக்கத் தொடங்கின.

'இலங்கைரசிகர்களை எல்லா நாட்டு ரசிகர்களையும்விட உயர்ந்தநிலையில் வைக்கலாம், அவர்கள் கலைஞர்களை மதிக்கிறார்கள், கலையைகலையாக ரசிக்கிறார்கள்' என்று சகோதரர்களில் ஒருவரான சேதுராமன் சொன்னர்.

'சொந்தத்தில் படமெடுக்க எண்ணமுண்டா?' எனறு கேட்டதற்கு 'அப்படியொன்றும் கிடையாது; ஆனல் அடுத்தபடமொன்றில்எமது நாதஸ்வரகானம் விரைவில் ஒலிக்கப்போகிறது. இதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன' என்ருர் 'சேது'

'கொழும்புக்கு 1958ல்வந்திருக்கிறோம், ஆனல் யாழ்ப்பாணத்துக்கு இப்போது தான் முதல்தடவையாக வருகிறோம்' என்று கூறிய அவர்கள் 'எமது மனப்பூர்வமான வாழ்த்துக்களை இலங்கை ரசிகர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்' என்றனர்

இன்றிரவு கரவெட்டியாக்கரைப்பிள்ளையார் கோயிலில் 'சேது' சகோதரர்களின் நாதஸ்வர இசை 'கதை' பேசவிருக்கிறது. ஈழத்து பிரபல தவில் வித்துவான் இவர்களுடன் ஜோடி சேர்ந்து தவில் வாசிக்கிறர்.

## இன்று

காரைநகர் பொதுநல சேவா சங்கத்தின் வருடாந்தவிழா இன்று காரைநகர் மகாசபை மண்டபத்தில் நடைபெறும்.

## மூன்று பேரை தேடுகின்றனர்

கைதடி, வெள்ளி

சாவகச்சேரி பொலிஸ் பகுதியை சேர்ந்த சரசாலை என்ற இடத்தில் நடந்த துப்பாக்கிப்பிரயோக சம்பவத்தை தொடர்ந்துபொலிஸார் சந்தேகத்தின்பேரில் 3பேரை தேடிவருகின்றனர்.

சந்தேகநபர்களான காசிப்பிள்ளை, கிட்டிணன், பொன்னுச்சாமி ஆகிய மூவரையும் பொலிஸார் தேடிவருகின்றனர்.

துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான முன்னாள் பஸ்கண்டக்டர் சம்புநாதபிள்ளை யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# நீரில்மூழ்கிமூன்று மாணவர் மரணம்

பையாகல-வெள்ளி

மகாகொடைமுஸ்லிம்வித்தியாலய மாணவர் மூவர் மறகலைக்குப் பக்கத்திலுள்ள கடலில் குளித்துக்கொண்டிருக்கும் பொழுது நீரில்மூழ்கி மரணமாயினர். முகமத் ஜுனைட், முகமத் உவைஸ் முகமத் ஹுசைன் ஆகிய மூவருமே நீரில் மூழ்கி பரிதாப மரணமடைந்தவர்களாவர்.

# 4 தமிழ்த் தலைவர்கள் ஒரே இடத்தில் நியமனப் பத்திரம் தாக்கல் செய்வர்

யாழ்ப்பாணம், சனி

தமிழரசு கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், தமிழர் சுயாட்சி கழக தலைவர் திரு. வ. நவரத்தினம், ஈழத்தலைவர் ஒற்றுமை முன்னணி தலைவர் திரு. சி. சுந்தரலிங்கம் ஆகிய நால்வரும் ஒரே இடத்தில் தங்கள் நியமனப்பத்திரத்தை தாக்கல் செய்வார்கள். இவர்கள் நால்வரும், யாழ்ப்பாணம், அரசாங்க செயலக கட்டடத்தில் நியமனப்பத்திரத்தை தாக்கல் செய்வார்கள்.

வடகிழக்கில் போட்டியிடும் அபேட்சகர்கள் கீழ்காணும் இடங்களில் நியமன

4-ம் பக்கம் பார்க்க

# ஒரு பெண் உட்பட 5 பேருக்குப் படுகாயம்

மாவிட்டபுரம், வெள்ளி

வீமன் காமத்தில் கடந்த இரவு நடந்த கோஷ்டிக் கலவரத்தில் ஒருபெண்உட்பட 5 பேர் படுகாயமடைந்தனர்

தெல்லிப்பழையை அடுத்த வீமன் காமத்தைச் சேர்ந்த த. இராசரத்தினம், தகமலநாதன் என்ற இருவரும் எஸ் செல்வநாயகம் என்பவரை பழைதகராறு காரணமாக தாக்கிய போது, இச்சம்பவத்தை பொலிசுக்கு அறிவிப்பதற்காக கார் பிடிப்பதற்காக வி. திருநாவுக்கரசு என்பவர் தெல்லிப்பழைக்குச் சென்றபோது அங்கும் இராசரத்தினமும், கமலநாதனும் சென்று அவரைத்தாக்கினார்களாம். இதையடுத்து கோஷ்டிச்சண்டை மூண்டதாம்.

இச்சண்டையில் கமலநாதனின் தாயார் உட்பட குறிப்பிட்ட நபர்கள் யாவரும் படுகாயம் அடைந்தனர். இவர்கள் தற்போது காங்கேசன்துறைவைத்தியசாலையில் சிகிச்சைபெறுகின்றனர்.

இதுபற்றி காங்கேசன்துறைப்பொலிஸ் பகுதியைச் சேர்ந்த பண்டா விசாரணையில் ஈடுபட்டுள்ளார்.


## 'ஈழநாடு' கிரிக்கெட் புதிர் முடிவுகள்

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் — மத்திய கல்லூரிக் கிரிக்கெட்போட்டியையொட்டி கிரிக்கெட் பிரியர்களுக்கு 'ஈழநாடு' ஸ்தாபனம் 'றுப்பி அட்வட்டைஸர்ஸ்' ஆதரவுடன் நடத்திய "கிரிக்கெட் புதிர்" முடிவுகள் 'ஈழநாடு' வாரமலரில் (30-3-70) வெளியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி:

வீடுகட்டக்கூடிய 3 1/2 பரப்பு நல்ல காணி புகையிரத நிலைய ஒழுங்கை, சாவகச்சேரியில் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்: டாக்டர் சோ. சற்குணராசா, வைத்தியசாலை. மூளாய். 1952

### வாடகைக்கு

வீடு.

நல்லூர் பண்டாரக்குளம் ஒழுங்கை 12-ம் இலக்க வீடு வாடகைக்குண்டு. மேற்படி இல்லத்தில் தொடர்புகொள்ளவும். 1954

### தேவை

மாகோ ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோவிலுக்குப் பிராமணக் குருக்கள் ஒருவர் தேவை. சம்பளம் மாதம் ரூபா 75/-ம், படித்தரம் ரூபா 50/-ம் கொடுக்கப்படும். விண்ணப்பிப்போர் வயது, முன் அனுபவ விபரங்களுடன் இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 5-4-70-க்கு முன்னர் டாக்டர் மா. ஜெகநாதன். அரசாங்க ஆஸ்பத்திரி, மாகோ என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1956


## 7பேர்போட்டி

திருவனந்தபுரம்மார்ச்27

கேரள சட்டசபைக்கு கொட்டாரக்கரைத் தொகுதியில் போட்டியிடும் கேரள முதலமைச்சர் அச்சுத மேனனை எதிர்த்து ஆறுபேர் போட்டியிடுகின்றனர்.


## நன்றி நவிலல்

R. செல்லையா அன் கோவினதும் கொழும்பு பயனியர் மோட்டோர் ஸ்ரோர்ஸ் ஆகிய ஸ்தாபனங்களின் உரிமையாளருமாகிய திரு. R. செல்லையாவினது அன்பு மகன் திரு. செ. ஆனந்தராஜாவின் மரணச்சடங்கில் பங்குபற்றிய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். தனித்தனியாக நன்றி தெரிவிக்க இயலாததையிட்டு வருந்துகின்றோம். திரு. R. செல்லையா, திருமதி R செல்லையா. 1955


## சாம்பியனாகியது

யாழ்ப்பாணம், சனி

தீவுப்பகுதி விளையாட்டுச் சங்கத்தினால் தீவுப்பகுதி விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்ட 'நல்லதம்பி வெற்றிக் கேடய'த்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் புங்குடுதீவு சிவலப்பிட்டி சனசமூக நிலையம் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது ......

## கிறீஸ்தவ போதனை

கைதடி, வெள்ளி

சாவகச்சேரிக் கிறீஸ்தவ சபையினர் பல பொது ஸ்தானங்களுக்குச் சென்று தங்கள் கிறீஸ்தவ போதனைகளை விபரித்து வருகின்றனர்.

கைதடியிலுள்ள அரசாங்க வயோதிபர் இல்லத்திலும் சென்று அங்குள்ள வயோதிபர்களுக்கும் தமது கிறீஸ்தவ நற்சிந்தனைகளைப் பற்றிப் போதித்துள்ளார்.


## அறிவித்தல்

இத்தால் சகலரும் அறியத்தருவது அளவெட்டி தெற்கு, காட்டுத்துண்டியில் வசிக்கும் சாகுல் கமீட் முகமது இபிருகிம், அல்லது சாகுல் கமீட் இபிருகிம், அல்லது நல்லையா செல்லையா வாகிய நான் இன்றுதொடக்கம் என் பெயரை நல்லையா செல்லையா என்று வழங்குவதுடன், ந. செல்லையா என்றும் ஒப்பம் இடுவேன்,

இப்படிக்கு

ச. க. இபிருகிம்

அல்லது

2014 ந. செல்லையா


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 28—3—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற் சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-00செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவு, 8-15 இஸ்லாமியகீதம், 8-30செய்திசுருக்கம்.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5.00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வாத்திய இசை, 6-15 நாட்டுப் பாடல்கள் எம். ஏ. அக்பர், 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-15 நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி 9-30 சித்திரம், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச் சுருக்கம்.

— —

## வதிரிடைமன் வெற்றி

புத்தூர், வெள்ளி

புத்த கலட்டி வீனஸ் கழகம் நடத்தும் கவிஞர் மு. செல்லையாவின்ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்காக நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வதிரிடைமன் விளையாட்டு...

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 15-ம் திகதி [28-3-70]

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

**மேஷம்-** ஆயுத பீடைக்கு இடமுண்டு. எனவே எதிலும் அவதானம் விரும்பத்தக்கது. அவசரப்போக்கு அனர்த்தங்களுக்கு இடமளிக்கலாம். தெய்வநம்பிக்கையுடன் சமயோசித புத்தியும் வேண்டும்.

**ரிஷபம்-** காதல் விவகாரங்கள் தலைதூக்கும் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். களஸ்திரவழியால் பொருள் வரவுக்கு இடமேற்படும். பெரியோர்கள் ஆதரவு கிடைக்கும் கண்ணியமானதினம்.

**மிதுனம்-** பணவிடயத்தில் அதிக சிக்கனத்தை கடைப்பிடிக்கவும் எதிர்பாராத பிரயாணம் ஒன்று ஏற்படலாம். தொழில்புரியும் இடத்தில் குறைகேட்க நேரிடும். பிறரை நம்பாதிருத்தல் நன்மையாகும்.

**கடகம்** பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும், தெய்வத்தின் அருளும் உண்டு. இலட்சியப்பாதையில் முன்னேற்றம் காணப்படும்.

**சிம்மம்-** தொழில்துறையில் நல்ல வருமானம் கிடைக்கும் வணிகர்களுக்கு ஆதாயம் உண்டு. புதிய உடன்படிக்கை மூலம் நல்ல திருப்பம் ஏற்படும். மகிழ்ச்சிகரமான பிரயாணமும் உண்டு.

**கன்னி-** கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். சிலருக்கு பதவிஉயர்வும் ஏற்படலாம். வெளியிடத்துத் தொடர்புகள் மூலம் செல்வாக்கு பெருகும். நீண்டநாள் பிணக்குகள் நிவர்த்தியாகும்.

**துலாம்-** வாய்வுக்கோளாறு உடல்நலத்தை பாதிக்கலாம். உணவு விஷயத்தில் சுகாதாரம்வேண்டும். தானிய நஷ்டத்துக்கு இடமுண்டு. வியாபாரிகள் புதிய முதலீடுகளை தவிர்த்துக்கொள்ளவும்.

**விருட்சிகம்-** அவசர முடிவின் மூலம் ஆபத்தை விலைகொடுத்து வாங்குவீர்கள். மனதில் அமைதி குன்றும். அயலவர்களின் குறுக்குவழித்தலையீடு உங்கள் கோபத்தை கிளறும். அடக்கம் விரும்பத்தக்கர்.

**தனுசு-** கனிவான நினைவுகளில் மூழ்கிப்போவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்கும். நீண்டநாள் அபிலாசை இன்று நிறைவேறும் உங்களுக்கு உதவுவதற்கு மற்றவர்கள் வருவார்கள்.

**மகரம்-** அமைதிக்கு பங்கம் ஏற்படும் சம்பவங்கள் இடம்பெறலாம். நெருங்கிய உறவினர் ஒருவருடைய உடல்நலம் பாதிக்கப்படலாம். வைத்தியச்செலவுக்கு இடமுண்டு. நிதானம்வேண்டும்.

**கும்பம்-** விளைபொருள் விருத்தியுடன் விருந்திற்கும் இடமுண்டு. தாய்வழித்தனமும் தாராளமாகக் கிடைக்கும். எதிர்கால வாழ்வுக்கான புதிய திட்டத்தை இன்று உருவாக்குவீர்கள். சிறப்பானதினம்.

**மீனம்-** உள்ளம் இன்பத்தால் துள்ளும். புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும், நீண்டநாள் பிணி நிவர்த்தியாவதற்கும் இடமுண்டு. பிள்ளையொன்றின் கல்வி முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும்.

## முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

கடந்த ஆண்டு நடந்த ஜி. ஸி. ஈ. (உயர்தர) பரீட்சையில் யாழ்ப்பாணம் அக்கடமியில் இருந்து தோற்றியவர்களின் முடிவுகள் வருமாறு:

உயிரியல் பிரிவில் பரீசைக்குத் தோற்றிய 33பேரில் 23 பேருக்கு 4 பாடங்களும் 9 பேருக்கு 3 பாடங்களும் செய்முறைப் பரீட்சைக்கு அழைப்பு வந்துள்ளது.

பௌதிக விஞ்ஞான பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிய 13பேரில்7பேருக்கு 4 பாடங்களுக்கும். 5 பேருக்கு ஒரு பாடத்துக்கும் செய்...

## அன்னதானம்

கைதடி, வெள்ளி

நேற்று பெரியவெள்ளி தினத்தன்று யாழ். சுண்டிக்குளி இளஞ்சிங்க சனசமூக நிலையத்தினர் இத்தினத்தை சிறப்பாகக் கொண்டாடி அன்னதானம் வழங்கினர்.

# யாழ். மாவட்ட உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

''யாழ்ப்பாணத்தில் உடற்பயிற்சிப்போட்டிகளில் காட்டப்படும் ஆர்வம் இலங்கையில் எப்பாகத்திலும் காட்டப்படுவதில்லை. சென்ற 17 ஆண்டுகளாக மிகவும் உயர்ந்தரக உடற்பயிற்சியை நாம் கண்டுகளிக்கிறோம்'' என்று பிரதம அதிதியாக கலந்துகொண்ட திரு. ஆர். எஸ். சீவரத்தினம் யாழ்ப்பாண மாவட்ட உடற்பயிற்சிப் போட்டிப் பரிசளிப்பு விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

வடமாநில வித்தியாபகுதியினரால் வருடந்தோறும் நடாத்தப்படும் உடற்பயிற்சிப்போட்டி யாழ், மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது பாடசாலைகள் ஏ. பி. பிரிவுகளாக வகுக்கப்பட்டு ஆண்கள், பெண்கள் மேல், மத்திய, கீழ்ப்பிரிவுகளுக்குபோட்டிகள் நடாத்தப்பட்டன.

வடமாநில வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் தேசியக்கொடியைப் பறக்கவிட்டு போட்டியை ஆரம்பித்துவைத்தார். போட்டி ஒழுங்குகள் யாவும் திருமதி பி. குகதாசனால் வெகு திறமையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பிரதம மத்தியஸ்தராக திரு ஆர். எஸ். சீவரத்தினம் கடமையாற்றினார். இப்போட்டிகளில் ஏ பிரிவில் 44 பாடசாலைகளும் பி பிரிவில் 30 பாடசாலைகளும் கலந்துகொண்டன. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் செல்வி கே. சரவணமுத்து பரிசில்களையும் பத்திரங்களையும் வழங்கினார்.

### ஏ பிரிவு

ஆண்கள் மேல்: உடுப்பிட்டி அ. மி., மல்லாகம் இந்து, வசாவிளான் ம ம வி. கொழும்புத்துறை ம வி.

ஆண்கள் மத்திய: உரும்பராய் இந்து, அருணோதய, மானிப்பாய் மெமோறியல்.

ஆண்கள் கீழ்: மல்லாகம் இந்து, அத்தியார் இந்து. உசன் இராமநாதன்.

பெண்கள் மேல்: இராமநாதன், உடுப்பிட்டி மகளிர், பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர், பண்டத்தரிப்பு மகளிர்.

பெண்கள் மத்திய: உடுப்பிட்டி மகளிர், வேம்படி மகளிர், இளவாலை கன்னியாஸ்திரிமடம், பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர்.

பெண்கள்கீழ்: உடுப்பிட்டி மகளிர், இராமநாதன் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர், அத்தியார் இந்து.

சிறந்தபெண்கள் கோஷ்டி: இராமநாதன் கல்லூரி மேற்பிரிவு.

சிறந்த ஆண்கள் கோஷ்டி: உடுப்பிட்டி அ மி கல்லூரி மேற்பிரிவு.

### பி பிரிவு

ஆண்கள் மேல்: உடுப்பராய் சைவ த க பா, இணுவில் சைவ மகாஜன.

ஆண்கள் மத்திய: உரும்பராய் சைவ த க பா, புங்குடுதீவு றோ க த க பா, பெரியபுலம் மெ மி த க பா, மீசாலை விக்கினேஸ்வர வித்தியாலயம்.

ஆண்கள் கீழ்: நாரந்தனை றோ க ஆ பா, உரும்பராய் சைவ த க பா, சண்டிலிப்பாய் வடக்கு த க பா, நாவாந்துறை றோ க த க பா.

பெண்கள் மேல்: சென்ற் யேம்ஸ் த க பாடசாலை, றோமன் த க பாடசாலை, கோப்பாய் சரவணபவானந்தா, இணுவில் சைவ மகாஜன.

பெண்கள்மத்திய: மானிப்பாய் புனித ஆண் றோ க பா, புங்குடுதீவு றோ க த க பா, உரும்பராய் சை த க பா, கோண்டாவில் இந்து த க பா.

பெண்கள் கீழ்: உரும்பராய் சைவத் தமிழ் க பா, மானிப்பாய் புனித ஆன்ஸ் றோ க பா, பெரியபுலம் மெ மி த க பா, கொக்குவில் ஞானபண்டித த க பா.

— —

## ஜோதிபாஸு புதுடில்லிபயணம்

கல்கத்தா, மார்ச் 26

மேற்கு வங்க அசெம்பிளியை மத்திய சர்க்கார் கலைத்து கூடிய விரைவில் தேர்தலுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற தமது கட்சியின் கோரிக்கையை சமர்ப்பிப்பதற்காக இடம் சாரிகம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஜோதிபாசு புதுடில்லி சென்றுள்ளார்.


ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி நம்பியார் தங்கவேலு நடித்த

ஹரிச்சந்திரா

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெய்சங்கர் (3 வேடங்களில்) விஜயநிர்மலா - பாலையா நடித்த

சிரித்த முகம்

28-3-70 இன்றுமுதல்

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்

ஆயிரக்கணக்கான கர்நாடக சங்கீத ரசிக மக்களின்வேண்டுகோளைப் பூர்த்திசெய்யும் முகமாக பல வருஷங்களுக்குப் பின் திரையிடப்படுகிறது

நிரந்தர சேமிப்புக்கு

வருடம் 9 சதவீத வட்டி

கொடுக்கப்படும்

இச் சேமிப்பை 30 நாள் அறிவித்தலில்

வருடம் 8 சத வீத வட்டியுடன்

எப்பொழுதும் எடுக்கலாம்

மறுவிபரங்கட்கு:-

தம்பி அன் கோ

வண்ணார்பண்ணை — யாழ்ப்பாணம்




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்

ஆயிரக்கணக்கான கர்நாடக சங்கீத ரசிக மக்களின்வேண்டுகோளைப் பூர்த்திசெய்யும் முகமாக பல வருஷங்களுக்குப் பின் திரையிடப்படுகிறது

சங்கீத மன்னன், கந்தர்வ கானவித்துவான், இன்னிசை வேந்தன்

பிரம்மஸ்ரீஎம்.கே.தியாகராஜபாகவதர்

ரி. ஆர். ராஜகுமாரி, வசந்தகோகிலம் கிருஷ்ணன், மதுரம்

நடித்த

# ஹரிதாஸ்

(புத்தம் புதிய கொப்பி)

மதுரையில் ஒரே தியேட்டரில் தொடர்ச்சியாய் 365 நாட்கள் ஓடி வெற்றிக்கொடி நாட்டியபடம்.



வெற்றிகரமான 2 வது மாதம்

கெப்பிட்டல் (கொழும்பு)

## வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 3-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிரசாந்தியப் பரிசு பெற்ற வெற்றிச்சித்திரம்





சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார், ஏ. வி. எம். ராஜன் மனோரமா
மற்றுபலர் நடித்த
சிவாஜிகணேசன் அளிக்கும்

# தில்லானா மோகனாம்பாள்



இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது

இங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)

ஆகிய திரைகளில்

முத்துராமன், புஷ்பலதா, நாகேஷ் ஜெயபாரதி, நம்பியார், ஏ. கருணாநிதி

நடித்த

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# சுபதினம்


புத்த கலட்டி வினஸ் கழகம் நடத்தும் கவிஞர் மு. செல்லையாவின்ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்காக நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வதிரிடைமன் விளையாட்டுக் கழகமும் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. இதில்வதிரிடைமன்விளையாட்டுக்கழகம் 3-1 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டி ஆட்டம் தொடங்கி முடியும் வரைக்கும் விறுவிறுப்பாகக் காணப்பட்டது. இப்போட்டிக்கு திரு. ''அமீர்'' மத்தியஸ்தராகக்கடமையாற்றினர் இப்போட்டி புத்த கலட்டி வீனஸ் திடலில் நடைபெற்றது.


## வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30 10-00
பிரிபோயா,போயா 2-30மணி
ஸ்ரீகாந்த் - ஜெயலலிதா
நடித்த
# வெண்ணிற ஆடை
(ஈஸ்ட்மன் கலர்)



## ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30
சிவாஜி- ஜெயலலிதா
நடித்த
# எங்க ஊர் ராஜா



வல்வெட்டித்துறை
## றஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா,போயா 2-30
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
நடித்த
# ராஜா வீட்டுபிள்ளை

4-00 P. M Only
SEMIRAMIS



Now showing
## MANOHARA
JAFFNA
Daily 4-45 7 & 9-45 p.m
Seven Arts Production
presents
Montgomery Clift
in
THE DEFECTOR
(Adults only Color)



## REGAL JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Gary Raymond,
Margot Trooger
in
TRAITORS' GATE


செய்முறைப் பரீட்சைக்கு அழைப்பு வந்துள்ளது.

பௌதிக விஞ்ஞான பிரிவில் பரீட்சைக்குத்தேற்றிய 13பேரில்7பேருக்கு 2பாடங்களுக்கும், 5 பேருக்கு ஒரு பாடத்துக்கும் செய்முறைப்பரீட்சைக்கு அழைப்பு வந்துள்ளது.

## பொலிஸ்படை உஷாராகிறது

கோட்டை,வெள்ளி

ஆட்சிமன்றம்கலைக்கப்பட்டதையொட்டி நாட்டின் சகல பகுதிகளிலும் எதுவித அசம்பாவிதங்களும் நடைபெறுதவாறு கவனிப்பதற்கு சகல பொலிஸ் நிலையங்களிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் யாவற்றையும் பொலிஸ் தலைமைக்காரியாலயம்கவனித்துவருகிறது

நாட்டின் சகல பகுதிகளிலும் வாழும் மக்களையும் அவர்கள் சொத்துக்களையும் பாதுகாப்பதற்குஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளனர்.

## மீண்டும் இயங்கும்

உடுப்பிட்டி,வெள்ளி

அல்வாய் தெற்கு சமாதானசபை மீண்டும் இயங்க ஆரம்பிக்கும், பலவருடங்களாக மூடப்பட்டிருந்த இச் சமாதான சபை அல்வாய் தெற்கில் புதிய சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள திரு. மு. சண்முகத்தின் முயற்சியைத் தொடர்ந்து புத்துயிர் பெற்றுள்ளது

அல்வாய் தெற்கு கிராம சேவையாளர் காரியாலயத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள இச் சமாதான சபை மூலம் இப்பகுதி மக்களின் பிரச்னைகள் பொலிஸ் நிலையம் கோர்ட் வரை செல்ல விடாது சமாதானமாகத்தீர்த்து வைக்கப்படும் எனத் திரு.சண்முகம் தெரிவிக்கிறார்.

## நியமனம்

தாவடி,வெள்ளி

துணுக்காய் உபதபாற் கந்தோரின் புதிய உபதபாலதிபராக திரு க. சந்திரசேகரம் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது நியமனம் சில காலம் பின்போடப்பட்டிருந்தது.

## ரோந்து


கைதடி,வெள்ளி

கைதடியில் நடந்த கோஷ்டிச் சண்டையைத் தொடர்ந்து இப்பகுதியில் பகலும் இரவும் ஆயுதம் தாங்கிய பொலிசார் ரோந்து சுற்றி வருகின்றனர்.




பயிர்த் தொழிலின் அதிசய கண்டுபிடிப்பு ....

# 'அல்கதீன்' குழாய்



பிற உற்பத்திப் பொருள்களும் இப்பணிகளையெல்லாம் செய்தல் கூடும். ஆனால், அல்கதீன் கூடுதலாகச் செய்வது என்ன? பயிர்த் தொழிலில் எல்லா வகையிலும் முன்னேற்ற வழியில் முன் நிற்பதுதான்.

நீர்பாய்ச்சும் பொறியியலாளர், பயிர்த் தொழிலாளர், தோட்ட முதலாளிகள், கொள்வனவு செய்யும் முகவர்கள் ஆகிய எல்லோருமே குறைகள் உண்டா எனக் கூர்ந்து அவதானிப்பவர்கள். அவர்கள் யாவருமே இன்று கிடைக்கும் குழாய்களுள் மிகச் சிறந்தவை என ஒரே முகமாக நீர் பாய்ச்சும் பணிகளுக்கெனத் தேர்ந்தெடுத்திருப்பது அல்கதீன் குழாய்களே. நீளம், குறைந்த எடை, இலகுவான இணைப்பு முறை, மலிவு, இடமாற்றத்துக்கு எளிமை................... அத்துடன் வெளியில் நொறுங்காத்தன்மை ஆகிய இவைதான் காரணங்கள்.

'அல்கதீன்' - குழாய்களுள்ளே முதன்மையானது.

CIC கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிற்றெட்.
தபால் பெட்டி 352 - கொழும்பு.

AJNS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்தியரின் தாக்குதலில் 15 இஸ்ரேலியர் மாண்டனர்

கெய்ரோ, மார்ச் 27

சூயஸ்கால்வாய்க்குக் குறுக்கே தென்பகுதியிலும் மத்தியிலும் இஸ்ரேல் நிலைகள் மீது ஐக்கிய அரபுக்குடியரசுப் போர்விமானங்கள் தாக்குதல் நடத்தியதில் பதினைந்து இஸ்ரேலியர் கொல்லப்பட்டனர். வாகனங்கள் பலவும் சேதமடைந்தன.

இதேசமயம் அரபுக்குடியரசுப் பகுதிக்குள் தங்கள் விமானங்கள புகுந்து எகிப்திய இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் எல்லாவிமானங்களும் பவித்திரமாகத் திரும்பிவிட்டதாகவும் டெல்அவிவ் செய்தியொன்று கூறுகிறது.

மேற்காசியப் பிரச்னைக்கு ஒரு நல்ல முடிவு காணும் பொருட்டு பேச்சுவார்த்தைக்கு ரஷ்யாவையும் சம்மதிக்கவைப்பதற்கு அமெரிக்கா தொடர்ந்து முயற்சி செய்துவருவதாக அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. ரோஜர்ஸ் தெரிவித்தார்.

மேற்காசியாவுக்கான ஐ.நா. சமாதானத் தூதர் டாக்டர் ஜாரிங் நியுயோர்க்கிலிருந்து மாஸ்கோபோய்ச் சேர்ந்திருக்கிருர். மாஸ்கோவில் தனதுநாடான சுவீடன் தூதுவராக மீண்டும் பொறுப்பேற்றிருக்கிருர். மேற்காசியப் பிரச்னைக்கு எடுக்கப்பட்டமுயற்சி வெற்றியளிக்காததே அவர் மாஸ்கோ திரும்பியுள்ளதற்குக் காரணம் எனறும் கூறப்படுகிறது.

## மிகப்பெரிய அணுகுண்டு

### அமெரிக்கா வெடித்துப் பரிசோதனை

நெவாடா, மார்ச் 27

மிகப்பெரிய அணுஆயுத சோதனையொன்றை அமெரிக்கா நேற்றுநடத்தியது. நிலத்துக்கடியில் நடத்தப்பட்ட இப்பரிசோதனையால் அணுக்கதிர் விஷம் பரவமாட்டாதென அமெரிக்க அணுசக்திக் கமிஷன் தெரிவித்தது.

ஹிரோஷிமாவில் இரண்டாவது உலக யுத்தத்தின்போது போடப்பட்ட அணுகுண்டைவிட ஐம்பது தடவை அதிக சக்தி வாய்ந்தது, நேற்றுப் பரீட்சிக்கப்பட்ட குண்டு என்று கருதப்படுகிறது.

இக்குண்டு வெடித்துப் பரீட்சிக்கப்பட்ட இரண்டு விநாடிகளில் நெவாடாவிலிருந்து 120 மைல் தூரத்திலுள்ள லொஸ்வெகாஸ் என்ற இடத்திலுள்ள கட்டிடங்கள் அதிர்ந்தன.

## கம்போடிய அரசைக்கவிழ்க்க ஐக்கியமுன்னணி

### சிகானுக் கூறும் யோசனை

பீக்கிங், மார்ச். 27

கம்போடிய புரட்சி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு நேச அரசுகள் ஒன்றுசேர்ந்து ஐக்கிய முன்னணிஅமைக்கவேண்டுமென்று பதவி இழந்த கம்போடிய இளவரசர் திரு நொரடம் சிகானுக் லாவோசின் இடதுசாரி பதட்லாவோத் தலைவர் இளவரசர் சுவன்ன வாங்குக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளார்.

கம்போடிய புரட்சிக்கு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள்தான் காரணமென் [illegible] உடனடியாக வட்டமேசை மகாநாடு கூட்டிப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்றுகம்போடிய அரசாங்கம் கூறிய யோசனையை வட வியட்நாம் நிராகரித்துவிட்டது.

**லாவோசும் சீனுவும்**

லாவோசில் சண்டையை விஸ்தரிக்க அமெரிக்கா முனைவதாக நவ சீனம் நேற்று குற்றம் சாட்டியது. இதே நிலை நீடித்தால் அதை சீன சும்மா பார்த்துக்கொண்டிராது என்று சீன தெரிவித்திருக்கிறது.

## மேல்சபையை ஒழிக்க மாட்டோம்

சென்னை, மார்ச்27

தமிழ்நாடு மேல்சபையை ஒழிக்கவேண்டுமென்று தாம் கூறவில்லையெனத் தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதி சட்டசபையில் கூறினர். மேல்சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டுமென்று கல்வியமைச்சர் திரு நெடுஞ்செழியன் கீழ்சபையில் சமீபத்தில் கூறியதை முதலமைச்சர் எடுத்துக்காட்டினர்.

—

## கொழும்பு துணைஆயர்

## செய்திச் சுருக்கம்

### பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

கோட்டை, வெள்ளி

பட்டதாரிகள் வேலைவாய்ப்பு பணியகம் மூலம் பட்டதாரிகளுக்கு வேலைவசதி வழங்கப்படவிருக்கிறது. கூட்டுத்தாபனங்களில் வழங்கப்படவிருக்கும் வேலைவாய்ப்பு விடயமாக திறைசேரிக் காரியதரிசி சுற்றுநிருபம் ஒன்றை சகல கூட்டுஸ்தாபனத் தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார். இதில் காலியாகவுள்ள இடங்கள் பற்றிக் கோரப்பட்டுள்ளது.

0 0 0

### இலங்கைக்கு அழைப்பு

மருத்துவத் துறையில் சர்வதேச நிலையத்துடன் சேர்ந்து கொள்ளுமாறு இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யுத்தம் நடைபெறும் நாடுகளுக்கு செஞ்சிலுவைச் சங்கம் செய்துவரும் சேவைபோல இதன்மூலம் இலங்கையும் சேவை செய்யமுடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி பரிசீலனை செய்வதாக சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஸி. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

0 0 0

### உலக நாடக தினம் இன்று

கோட்டை, வெள்ளி

உலக நாடகதினம் இன்று கொண்டாடப்படுகிறது. நாடு பூராவும் நடைபெறும் கொண்டாட்டங்களில் கருத்தரங்கு, நாடக, பொருட்காட்சி நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

கொழும்பில் கலாபவனத்தில் இன்று தொடக்கம் 31-ம் திகதிவரை இதையொட்டி பொருட்காட்சி ஒன்று நடைபெறுகிறது. நாடக ஆசிரியர்கள் நடிகர்களின் கருத்தரங்கமும் அமு[illegible]செய்யப்பட்டுள்ளது.

## 'மகாவலிசபை நியமனம் அர்த்தமற்ற செயல்'

அம்பாறை, வெள்ளி

ஏற்கனவே ஓர் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபை இருக்கும்பொழுது மகாவலிசப என்ற பெயரில் மற்றுமொரு ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையை நியமிப்பது ஒருவித கருத்துமற்ற செயலாகும். சமீபத்தில் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையின் தொழில்நுட்ப அதிகாரிகள் சங்க மண்டபத்தில் நடைபெற்ற சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய சங்கத் தலைவர் திரு டபிள்யூ. தர்மகீர்த்தி மேற்கண்டவாறு கூறினர்.

அவர்மேலும் பேசுகையில் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபை நிறுவப்பட்டு 20 வருடங்கள் ஆகின்றன, எனவே இச் சபையில் உள்ள வேலையாட்கள் தொடக்கம் நிர்வாகிகள் வரை சிறந்த அனுபவமுடையவர்களாகவேயிருக்கிருர்கள். இவ்வாறிருந்தும் இச் சபையை தவிர்த்துவிட்டு மற்றுமொரு சபையை ஆற்றுப்பள்ளத்தாக்கொன்றின் அபிவிருத்திக்கு உருவாக்குவது அர்த்தமற்ற செயலாகும்.

மேலும் பிறநாடுகளின் திட்ட காரியாலயங்களில் எமது நாட்டு நிபுணர்கள் பலர் செயலாற்றுகின்றனர். இவர்களின் சேவையைப் பயன்படுத்தாமல் எமது நாட்டின் புவியியல் அமைப்புப்பற்றி ஒன்றுமே தெரியாத பிறநாட்டவர்கள் சேவையைப் பயன்படுத்துவதும் விரும்பத்தகாததும் தவருனதுமான செயலாகும். எனவே எங்கள் சங்கம் மகாவலிசபை நியமனத்தை கடுமையாக எதிர்க்கும். அத்துடன் காணிநீர்ப்பாசன அமைச்சரை மகாவலி திட்டத்தின் முழு வேலையையும் ஆற்றுப்பள்ளத்தாக்குஅபிவிருத்தி சபையிடம் ஒப்படைக்குமாறு கோருவோம் என்று கூறினர்.

## உலகவங்கி அளித்த கடன் அன்றி அமெரிக்கவங்கியல்ல

— பிரேமதாஸா

பொல்கொல்லை, வெள்ளி

'உலகவங்கியிடம் கடன் எடுத்தபடியினுல் தேசிய அரசாங்கம் நாட்டை அமெரிக்காவுக்கு ஈடுவைத்துவிட்டது என எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்கின்றனர். அவர்களுக்கு உலகவங்கிக்கும் அமெரிக்க வங்கிக்குமுள்ள வித்தியாசம் தெரியவில்லை. உலக வங்கியினுலேயே எங்களுக்குக்கடன் வழங்கப்பட்டதன்றி அமெரிக்க வங்கியினுல் அல்ல என்பதை நான் கூறவிரும்புகிறேன். தேசிய அரசாங்கம் இக்கடனை உலகவங்கிக்கு திருப்பிக்கொடுக்குமேயன்றி அமெரிககாவுக்குக் கொடுக்கமாட்டாது.'

வத்தேகம நகரசபையின் புதிய கட்டிடமொன்றைத் திறந்துவைத்துப் பேசிய திரு. பிரேமதாசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், நான் சில எதிர்கட்சி அங்கத்தவர்களுடன் மகாவலி திட்டம் பற்றி பேச்சுவார்த்தை நடத்தினேன். அவர்கள் அது [illegible] பெரும் [illegible]க்கும் என்பதை ஒத்துக் கொண்டார்கள். அவர்கள் நாங்கள் செய்த இந்த நல்லவேலையை ஒத்துக்கொண்டாலும் தங்களை கட்சியில் இருந்து கட்சித் தலைவர்கள் நீக்கிவிடுவார்கள் என்ற காரணத்திற்காக நாங்கள் செய்த நன்மைகளைப் பொதுமேடையில் குறிப்பிடத் தயங்குகிருர்கள்.

திருமதி பண்டாரநாயக்கா பிரதமராகவிருந்தபொழுது வங்கியிடம் கடன் கேட்டார், அந்தநேரத்தில் நாட்டின் நிதிநிலைமையும் அபிவிருத்தி நிலைமையும் மோசமாகவிருந்ததைதயுணர்ந்து உலக வங்கி கடன் வழங்க மறுத்தது. 1965-ம் ஆண்டு பிரதமர் டட்லி உலகவங்கியிடம் கடன் கோரியபோது உலகவங்கி அவரை முதலில் நாட்டை அபிவிருத்தியடையச் செய்யும்படி தெரிவித்தது. தற்போது நாட்டின் கைத்தொழில் விவசாய அபிவிருத்திநிலைமையைக் கண்கூடாகக்கட்ட உலக வங்கி கடன் வழங்க முன்வந்துள்ளது. எனக்கூறினர்.

திருவாளர்கள் பீ. தர்மசிறி, பி. ஏ. வீரகோன், வி. விஜயசிறி உட்படப்பலர் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

## "தேசிய இளைஞர் சேவை ஒரு தேர்தல் குண்டு"

உகவத்தை, வெள்ளி

"தேசியஅரசாங்கம் ஆரம்பித்துள்ள 'தேசிய இளைஞர் சேவை' நாட்டின் இளைஞர்களைத் தவருன வழியில் இட்டுச் செல்லும் ஒரு தேர்தல் குண்டு"

உகவத்தையில் நடைபெற்ற சுதந்திரக்கட்சிப் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய முன்னுள் எம். பி. திரு. பிறின்ஸ் குணசேகரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், மக்களின் நிலையையுயர்த்த இத்தேசிய அரசாங்கம் ஒன்றும்செய்யவில்லை. இதற்குப் பதிலாக ஒருசில முதலாளிவர்க்கத்தினரையே திருப்திப்படுத்தியுள்ளது பொதுத்தேர்தலில் தங்களுக்கு தோல்வி ஏற்படும் என உணர்ந்த அரசாங்க சார்பு ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் துரிதமாக பலவழிகளில் மக்களை ஏமாற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டுவருகிருர்கள். எனவே இளைஞர்கள் ஏமாருது தங்கள் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குகூட்டணியினருக்கு ஆதரவளியுங்கள்' எனக் கூறினர்.

ஜனுப் எம். மன்சூர் மரைக்கார் உட்படப் பலர் இக்கூட்டத்தில் உரைநிகழ்த்தினர்.

## பட்டப்பகலில் கொள்ளை

### பருத்தித்துறையில் சம்பவம்

உடுப்பட்டி, வெள்ளி

பருத்தித்துறையில் பட்டப்பகலில் நடந்த பகற்கொள்ளை பருத்தித்துறையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த வியாழக்கிழமை இத்திருட்டு நடந்தது.

பருத்தித்துறையில் உள்ள இலங்கைப் பெற்ருேலியம் கூட்டுத் தாபனத்திற்குச் சொந்தமான இரு பெற்ருேல் நிலையங்களிலுமே 700 ரூபா பட்டப்பகலில் கொள்ளையடிக்கப்பட்டதாம்.

இவ்விரு பெற்ருேல் நிலையங்களிலும் தொழிலாளியாகக் கடமையாற்றிவந்த இளைஞர் ஒருவரே பெற்ருேல் நிலையங்களுக்குள் கண்ணுடி, பூட்டுக்களை உடைத்துப் புகுந்து. திருட்டு நடத்தியதாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் டாக்ஸி ஒன்றில் வந்தே இத்துணிகரத் திருட்டுக்களை நடாத்தியதாகவும், சம்பந்தப்பட்ட டாக்ஸியும், சந்தேகநபரும் கோப்பாயில் வைத்துப் பொலிஸாரால், திருட்டு நடைபெற்ற சில நிமிடங்களில் பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளை நடைபெற்றதாகக் கூறப்படும் இரு பெற்ருேல் நிலையங்களிலும் கூடுதலாகச் சேதமடைந்துள்ளது விநாயகமுதலியார் வீதியிலுள்ள பெற்ருேல் நிலையமாகும். இந்நிலைய மனேஜர் மதிய உணவிற்காக நிலையத்தைப் பூட்டிவிட்டுச் சென்ற தருணம் சந்தேகநபர் நிலையக் கண்ணுடிகளை உடைத்து உள்ளே புகுந்து திருடியுள்ளாரெனப் புலன்விசாரணையில் தெரிய [illegible]

## விரைவில் ஆண்களுக்கும் வைத்தியசாலை

விஸ்வமடு, வெள்ளி

'தர்மபுரக் குடியேற்றப் பகுதியில் குறைந்தளவு தொகை மக்கள் வாழ்ந்தாலும் அவர்களின் தரம் உயர்ந்து வருகின்றது. இச்சிறு பகுதியில் இப்படிஒரு பிரசவ விடுதியை திறந்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும்மட்டுமே பயன்படக்கூடியதாக அமைக்கப்பட்ட இப் பிரசவ விடுதியில் ஆண்களுக்கு இடமில்லாவிட்டாலும் இன்னும் சில ஆண்டுகளில் ஆண் நோயாளருக்கான வைத்திய விடுதி அமைப்பதற்கு ஒழுங்குகள் செய்ய நான் காத்திருக்கின்றேன்.

மேற்கண்டவாறு தர்மபுரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பிரசவ விடுதியொன்றைத் திறந்து வைத்துப் பேசிய சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு கு. பாலசிங்கம் கூறினர்:

—

## 'பொய் வாக்குறுதிகளை கொடுக்கமாட்டோம்'

மினுவாங்கொடை, வெள்ளி

'இந்நாட்டின் ஏழை மக்கள் சுதந்திரமாக வாழ்ந்தது திரு. பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்திலேயேயாகும். அக்காலப்பகுதியில்தான் அவர்கள் பூரண சுதந்திரத்தை அனுபவித்தார்கள்.'

மினுவாங் கொடையில் நடைபெற்ற சுதந்திரக்கட[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரி பதட்லாவோத் தலைவர் இளவரசர் சுவன்ன வாங்குக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளார்.

கம்போடிய புரட்சிக்கு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள்தான் காரணமென்றும் அவர் குற்றம் சாட்டியிருக்கிறார்.

## நிராகரிப்பு

கம்போடிய மண்ணிலிருந்து வியட்நாமிய துருப்புகளை திருப்பி அழைப்பது சம்பந்தமாக வட வியட்நாமியரும் வியட்காங்கியரும் கம்போடியத் தலைநகரில் விஸ்தரிக்க அமெரிக்கா முனைவதாக நவசீனம் நேற்று குற்றம் சாட்டியது. இதே நிலை நீடித்தால் அதை சீனு சும்மா பார்த்துக்கொண்டிராது என்று சீனு தெரிவித்திருக்கிறது.

## தந்திரம்

தென்வியட்நாமிலுள்ள காயமடைந்த, நோய்வாய்ப்பட்ட வட வியட்நாம் போர்க் கைதிகளை விடுவிக்க தென்வியட்நாம்அரசு விருப்பம் தெரிவித்ததை வட வியட்நாம் அதிகாரியொருவர் இது ஒரு தந்திரம்என்று கூறினர்.

சபையில் சமீபத்தில் கூறியதை முதலமைச்சர் எடுத்துக்காட்டினுர்.

தில் இன்று தொடக்கம் 31-ம் திகதிவரை இதையொட்டி பொருட்காட்சி ஒன்று நடைபெறுகிறது. நாடக ஆசிரியர்கள், நடிகர்களின் கருத்தரங்கமும் அமுல் செய்யப்பட்டுள்ளது. கல்வி அமைச்சர் இவ் விழாவை ஒழுங்கு செய்துள்ளார்.

0 0 0

மகாவலி திட்டம் பற்றி பேச்சுவார்த்தை நடத்தினேன். அவர்கள் அது விவசாயிகளுக்குப் பெரும் நன்மைபயக்கும் என்பதை ஒத்துக் கொண்டார்கள். அவர்கள் நாங்கள் செய்த கடன் வழங்க முன்வந்துள்ளது. எனக்கூறினுர்.

திருவாளர்கள் பீ. தர்மசிறி, பி. ஏ. வீரகோன், வி. விஜயசிறி உட்படப்பலர் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

காக நிலையத்தைப் பூட்டிவிட்டுச் சென்ற தருணம் சந்தேகநபர் நிலையக் கண்ணுடிகளை உடைத்து உள்ளே புகுந்து திருடியுள்ளாரெனப் புலன்விசாரணையில் தெரியவந்துள்ளது.

இத்திருட்டுக்கள் சம்பந்தமாகப் பருத்தித்துறைப் பொலிஸார் புலன்விசாரணை செய்துவருகின்றனர். இப் பகற்கொள்ளையை நேரில் கண்டதாகக் கூறப்படும் சிலரின் சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

யேயாகும். அக்காலப்பகுதியில்தான் அவர்கள் பூரண சுதந்திரத்தை அனுபவித்தார்கள்.'

மினுவாங்கொடையில் நடைபெற்ற சுதந்திரக்கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய கொலன்ஞவை ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. டி. பி. இலங்கரத்தின மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் இந்நாட்டு மக்கள் இன்று தமக்கு நன்மையளிக்கவல்ல அரசாங்கம் எது என்பதை நன்குக உணர்ந்துவிட்டார்கள. நாங்கள தேசிய அரசாங்கத்தினர் போன்று செயல்படுத்த முடியாத வாக்குறுதிகளை மக்களுக்குக் கொடுக்கமாட்டோம். கொடுக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவோம்.

---

# வங்கிகள் அரசுடைமை மசோதா நிறைவேறியது

புதுடில்லி, மார்ச். 27

இந்தியாவிலுள்ள பதினுன்கு பெரிய வங்கிகளை மீண்டும் அரசுடைமையாக்கும் மசோதா இந்திய ஆட்சி மன்றத்தின் இரு சபைகளின் அங்கீகாரத்தையும் பெற்று விட்டது. லோக சபையில் முன்னரே நிறைவேற்றப்பட்ட இந்த மசோதா நேற்று ராஜ்ய சபையில் ஏகமனதாகநிறைவேறியது ராஜ்ய சபையில் இந்த மசோதாமீது பத்து மணிநேரம் தொடர்ச்சியாக விவாதம் நடைபெற்றது. வெளிநாட்டு வங்கிகளுட்பட சகல வங்கிகளையும் அரசுடைமையாக்க வேண்டுமென்று விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அங்கத்தவர்கள் பலரும் கூறினர். இம்மசோதாவுக்கு கொண்டுவரப்பட்ட 55 திருத்தங்களில் சில வாபஸ் பெறப்பட்டன. மற்றவை நிராகரிக்கப்பட்டன. ......

## இரு அரபுகளுக்கு சிறைத் தண்டனை

ஏதென்ஸ், மார்ச் 27

இஸ்ரேல் விமானம் ஒன்றின் மீதுதாக்குதல் நடத்தி ஒரு பிரயாணியைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட இரண்டு அரபு இளைஞர்களுக்கு கிரேக்க நீதிமன்றம் நேற்று தலா17 வருடமும் 14 வருடமும் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. 15 மாதங்களுக்கு முன்னர் இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்றது.

## தொழிலாளர் நலவாழ்வு நிதி

சென்னை, மார்ச்,27

தொழிலாளர் நலவாழ்வு நிதி யொன்றை தமிழ்நாடு அரசு ஆரம்பித்திருக்கிறது தமிழக அரசு கொடுத்த 5லட்சம் ரூபாயுடன் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் இந்த நிதிக்குதொழிலாளரும் முதலாளிமாரும் தங்கள்பங்கை செலுத்துவர் இத்தகவலைத் தமிழக தொழிலாளர் நல அமைச்சர் வேழ வேந்தன் தெரிவித்தார்.

## தியாகதினம்

பிரேஸ்பூர், மார்ச். 27

உசேனிவாலா எல்லையில் சட்லஜ் நதிக்கரையில் நாட்டுக்காக உயர் தானம்செய்த பகத்சிங், ராஜ்குரு, சுக்தேவ் சமாதியில் 3000 மக்கள் அஞ்சலிசெலுத்தினர். பகத்சிங்கின் 90 வயதான தாய் கண்களில் நீர்மல்க மகனுடைய சமாதியில் மலர் வளையம் வைத்தார்.

## நான்கு வல்லரசு பேச்சுவார்த்தை

பெர்லின், மார்ச் 27

ஜெர்மனியின் எதிர்காலம் பற்றி பேர்லினில் பேச்சுவார்த்தை நடத்திய நான்கு வல்லரசுகளின் பிரதிநிதிகளும் மீண்டும் அடுத்த மாதம் 28ந்திகதி சந்தித்துப் பேசவிருக்கின்றர்.

கடந்த 10 வருடங்களில் ஜெர்மனி சம்பந்தமாக வல்லரசுகளுக்கிடையில் நடைபெறவிருக்கும்பெரிய பேச்சுவார்த்தை இது வாகும்.

## விடுமுறையிலும் இயங்கும்

கோட்டை, வெள்ளி

நெல் கொள்வனவு செய்யும் உத்தரவாத விலைத் திட்ட நிலையங்கள் பெரும்போக நெற் செய்கையின் போது அதிக நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக விடுமுறை தினங்களிலும் இயங்கும் எனத் தெரியவருகிறது.

## கொழும்பு துணைஆயர் கவலை

பண்டத்தரிப்பு, வெள்ளி

'கத்தோலிக்க மாணவர் தற்போது சமயக்கடமைகளை அனுசரிக்கும் உரிமைகளை இழந்து வருகிறுர்கள். பெரிய வியாழன், பெரிய சனி போன்ற முக்கிய தினங்களிலும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது'' இவ்வாறு கொழும்பு துணைஆயர் வந். ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது: ''இது பற்றிக் கல்விப்பகுதியினருக்கு முன்பு அறிவிக்கப்பட்டிருந்தும் எதுவிதநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை இப்படியான முக்கிய தினங்களில் அரசாங்க பரீட்சைகள் கூட நடைபெறுகின்றன. இதனுல் மாணவர்கள் தமது சமயக் கடமைகளை அனுசரிக்க முடியாமல்திண்டாடுகிறுர்கள்.'

## குருத்துவ அபிஷேகம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

இளவாலை பெரியவிளானைச் சேர்ந்த திரு. பாவிலுப்பிள்ளை யோசேப் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் வண. சகோதரர் யோண் எட்வேட் எதிர்வரும் சித்திரை 6ம் திகதி யாழ் மேற்றிராணி ஆண்டகையால் யாழ். ஆசனக் கோவிலில் குருத்துவ அபிஷேகம் பெறுவார்.

1959-ம் ஆண்டு குருமடத்தில் சேர்ந்து கல்விபயின்ற இவர் சில காலம் டப்ளின் நகர பல்கலைக்கழகத்திலும் கல்விபயின்றுர். தமது குருத்துவ கல்வியை கண்டியிலுள்ள அம்பிற்றியாவில் கற்ற இவர் இளவாலைபுனித என்றியரசர் கல்லூரிப் பழைய மாணவராவார்.

## 'வீதியைத் திருத்துக'

வேலணை, வெள்ளி

வேலணை வெள்ளைக்கடற்கரை பள்ளிவாசலிலிருந்து செட்டிபுலம் சந்திவரையுள்ள வீதிசீர்கேடாக இருப்பதால் அவ் வீதியைத் திருத்தும்படி கோரி வேலணை கலைமகள் சனசமூக நிலையமும், தீவுப்பகுதி பஸ் பிரயாணிகள் சங்கமும் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளது.

## கனடா உதவி

கனடிய அரசாங்கம் 26,000 தொன் மாவை இன்று இலங்கைக்கு வழங்கியது. 1965-ம் ஆண்டு முதல் வருடாவருடம் கனடிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் 1 கோடியே 10 இலட்சம் ரூபா பெறுமதியான உதவியின் ஒரு பகுதியாகும் இது.

கனடாவிடமிருந்துபெறப்படும் உதவி இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டு வருகிறது. டீசல் என்ஜின்கள், கிராமியசாலைகள் அமைத்தல் போன்றவற்றுக்கு இந்நிதி செலவிடப்பட்டு வருகிறது.

## புதிய பஸ்சேவை நடத்துக

வேலணை, வெள்ளி

மண்கும்பான், சாட்டி ஊடாகபஸ்சேவையைநடத்தும்படியும் யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கு செல்லும்பஸ்ஸை அல்லைப்பிட்டி சந்திவரை சென்று பின் ஊர்காவற்றுறைக்கு செல்ல வழிசெய்யும்படியும் கோரி சம்பந்தப்பட்ட இ.போ.ச அதிகாரிகளுடன் தீவுப்பகுதிபஸ்பிரயாணிகள் சங்கம் தொடர்கொண்டுள்ளது.

## யு.என்.பி,யில் சேரக் காரணம்

களுத்துறை, சனி

'மகாவலிகங்கையைத் திசைதிருப்பும் திட்டத்தையும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களையும் இடதுசாரி தலைவர்கள் எதிர்ப்பதை ஆட்சேபிப்பதற்காகவே நான் மற்றும் பலரோடு சேர்ந்து லங்கா சமசமாஜக் கட்சியை விட்டு ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்தேன்' என்று இலுக்வத்தையில் நடைபெற்ற ஒரு யூ. என், பி. கூட்டத்தில்பேசும் போது சமசமாஜக் கட்சி கிராமசபை அங்கத்தவரான திரு டைன்ஸ் ஹேவாகமை கூறினர். களுத்துறை நகரசபைத் தலைவர் உட்பட மற்றும்பலர் இக்கூட்டத்தில் பேசினர்.

# எம்மை எதிர்நோக்கும் அபாயங்கள்

— எஸ்.ஜே.வி.

அம்பாறை, வெள்ளி

''தமிழ்ப் பிள்ளைகளுக்குச் சிங்களத்தைப் போதனு மொழியாக்குதல், தமிழ்ப் பகுதிகளில் சிங்கள மக்களைக் குடியேற்றுதல் ஆகிய இரண்டும் இலங்கைவாழ் தமிழ்பேசும் தமிழ்மக்களாகிய எம்மை எதிர்நோக்கியுள்ள இரு பெரும் அபாயங்களாகும். சமஷ்டிக்கட்சியே இந்த அபாயங்களை எதிர்த்துநின்றது. இன்னும் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டேயிருக்கிறது''

களுவாஞ்சிக்குடியில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் ''தமிழர்கள் தனித்துவம் வாய்ந்தவர்களாக வாழவேண்டும். தமிழ்பேசும் மக்கள் வாக்களிப்பதில் கவனமாக இருக்கவேண்டும்.''

இக்கூட்டத்தில் பேசிய தமிழரசுக்கட்சித் தலைவர் எதிர்வரும் தேர்தல் முடிந்ததும் புதிய அரசாங்கத்தை அமைப்பதற்குச் சமஷ்டிக் கட்சி அழைக்கப்படுமாதலால் இத்தடவை தமிழ் மக்களின் பொறுப்பு அதிகமாகிறது என்றுர்.

தமிழரசுக்கட்சிக் காரியதரிசி திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில், 1956ம் ஆண்டுக்கு முன்னர் தமிழ்ப் பிரதிநிதிகள் பல கட்சிகளிடையே சிதறுண்டு காணப்பட்டனர். தமிழரசுக்கட்சி உருவாகிய பின்னரே தமிழ்மக்களின் பிரதிநிதிகள் ஒரு சக்திரமான சக்தியாக விளங்கினர் எனக் குறிப்பிட்டார்.

## கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கைதடி இந்துவாலிபர்சங்கத்தின் பத்தாவது ஆண்டு வருடாந்தப் பொதுக் கூட்டம் வருகிற ஏப்ரல் மாதம் 14-ம் திகதி நடைபெறவிருக்கிறது. புதுவருட நிர்வாகிகள் தெரிவும் அன்று நடைபெறும்.

## படகு சேவையை சீராக்க நடவடிக்கை

மூதூர், வெள்ளி

பாலைதீவு பரிதாப படகு விபத்தைத் தொடர்ந்து திருகோணமலை அரசாங்க அதிபர் திரு. சோமபாலகுணதீரா மூதூருக்கும், திருகோணமலைக்கு மிடையில் சேவைசெய்யும் படகுகளை திருத்தி நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இப்போதிருக்கும் மோட்டார்ப்படகுகளும், வள்ளங்களும் தனிப்பட்டவர்களாலும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாலும் நடாத்தப்பட்டுவருகின்றன. இவை யாவற்றையும் பரிசோதிக்கும்படி உரிமையாளர்களுக்கு அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

## கடலில் நனைந்த அரிசி விநியோகம்

அல்லைப்பிட்டி, வெள்ளி

நயினதீவு கூப்பன் கடைகளில் கடல்நீரில் நனைந்த வெள்ளைப் பச்சை அரிசியே மக்களுக்கு வழங்கப்படுகிறதாம். வள்ளத்தின் மூலம் நயினதீவுக்கு அரிசிஎடுத்துச் செல்லப்படும்போது கடல்நீரில் நனைந்த அரிசியையே இப்பகுதி மக்கள் பெறக்கூடியதாகவிருக்கிறது. இது பற்றி பொதுமக்கள நயினதீவு கிராமசபையினரிடம் முறையிட்டுளளனர்.




இன்று தொடக்கம் மூன்றுதினங்கள் வெள்ளிவிழாக் கொண்டாடும் சங்கானை கிழக்கு மத்திய ப. நோ. கூ. சங்க செயற்குழுவும் ஊழியர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 15-ந் திகதி (28-3-70)


## தேர்தலும் அபேட்சகர்களும்

தேர்தல் வரும் போகும்; அமைச்சர்கள் வருவார்கள்; போவார்கள். ஆட்சிமன்ற உறுப்பினர்களாக நேற்று இருந்தவர்கள் நாளை அந்தப் பதவியில் இல்லாமல் போகலாம். ஆனால் நாடும், நாட்டின் அமைதியும், நாட்டு மக்களின் முன்னேற்றமும் நிரந்தரமாக இருக்கவேண்டியவை.

தேர்தல் வருகிறதென்றாலே நாட்டு மக்கள் குறிப்பாகச் சிறுபான்மையினரும் பொதுவாக நாட்டின் அமைதியை விரும்புபவர்களும் இங்கு அச்சமடைகின்றனர்.

''வெறும்வாயை மெல்லுபவனுக்கு ஒருபிடி அவல் கிடைத்தமாதிரி'' என்று சொல்வார்கள். நமது நாட்டில் சில அரசியல்வாதிகளுக்கும் சில பத்திரிகைகளுக்கும் இது வெகு பொருத்தம். மொழித்துவேஷம், இனத்துவேஷம் என்று துவேஷப் பிரசாரத்தையே மூலதனமாகக் கொண்டு அரசியல் பிழைப்பு நடத்தும் சிலர் தேர்தல் சமயத்தில் எப்படியெப்படியெல்லாம் துவேஷத்தைக் கிளப்பிவிடமுடியுமோ அப்படியப்படியெலாம் தீவிரமாகச் செயல்படுவார்கள் என்பது நாடறிந்த விஷயம். வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பி அரசியப் ஆதாயம் பெற்றதன் விளைவாக 1956-ம் ஆண்டிலும் 1958-ம் ஆண்டிலும் நடந்த சம்பவங்களை நன்கு உணர்ந்தும் இன, மத, மொழித் துவேஷத்தைத் தடுப்பதற்கு இதுவரை சரியான நடவடிக்கை எடுக்க நாடு தவறிவிட்டது. மலேஷியாவில் கடந்த பொதுத் தேர்தலைத் தொடர்ந்து ஏற்பட்ட வகுப்புக் கலவரத்தின் விளைவை உணர்ந்த மலேஷிய அரசாங்கம் வகுப்புத்துவேஷத்தைத் தூண்டுவோர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்குத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்திருக்கிறது. நமது நாட்டில் இப்போது ஆட்சிமன்றம் கலைக்கப்பட்டு இன்னும் இரண்டு மாதங்களில் தேர்தல் நடைபெறவிருப்பதால் வகுப்புத் துவேஷத்தைத் தடுக்க சட்டரீதியாக புதிய முயற்சியெதுவும் செய்யமுடியாது ஆனாலும் இப்போதுள்ள குற்றத்தடுப்புச் சட்டத்தின் கீழ் வகுப்பத்துவேஷத்தைத் தூண்டிவிடுவோர் மீது பொலிசார் ஓரளவாவது நடவடிக்கை எடுக்க முன்வந்தால் பயனில்லாமல் போகாது. கூட்டங்களில் மணிக்கணக்காகக் காத்து நின்று இரகசியப்பொலிசார் பேச்சுக்களைக் குறிப்பெடுத்ததுதான் மிச்சமே தவிர வகுப்புத்துவேஷத்தைத் தூண்டிவிடும் வகையில் பேசியவர்கள் எவர் மீதாவது நடவடிக்கைஎடுத்ததாகத் தெரியவில்லை,

இதேசமயம் அரசியல் தலைவர்கள் தாங்களாகவே முன்வந்து வகுப்புத் துவேஷப் பிரசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன் நேர்மையான, அமைதியானமுறையில் தேர்தல் நடைபெறவும் வழிவகுக்கலாம்.

துவேஷப்பிரசாரம் ஒருபுறமிருக்க அபேட்சகர்கள் மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிடக்கூடிய முறையில் மேடைகளில் நின்று முழங்குவதையும் கொள்கைகளைப் பற்றிப் பேசுவதையும் விடுத்து அபேட்சகர் சொந்த வாழ்க்கை, தனிப்பட்ட செயல், குடும்பப் பிரச்னைகளை எடுத்துக் கூறி ஒருவருக்கொருவர் வசைமாரி பொழிவதையும் கைவிடவேண்டும்.

''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு''

என்ற தமிழ்மறையாம் திருக்குறள் கூறுவதை பொதுமக்கள் அறிந்து உணர்ந்து நடப்பதற்கு தலைவர்களும் மக்களை வழிநடத்தவும் மக்களுக்குச் சேவைசெய்யவும் தேர்தலில் போட்டியிடும் அபேட்கர்களும் வழிகாட்டவேண்டும்.

தேர்தல் அமைதியாகவும் நேர்மையாகவும் நடைபெறுவது அபேட்சகர்களின் கையிலேயே பெரிதும் தங்கியிருக்கிறது.

## ஏன் இந்த அநியாயம்?

# சிலுவையில் அறைந்த ஆணிகள் இன்றும் பாதுகாக்கப்படுகின்றன

## உலகமீட்பரின் உன்னத நினைவுச் சின்னங்கள்

யேசு கிறிஸ்துநாதரை சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டதினம் நேற்று பெரிய வெள்ளிக்கிழமை உலககிறிஸ்தவமக்களால் அனுஷ்டிக்கப்பட்டது. யேசுநாதர் 3 நாட்களின் பின் உயிர்பெற்றார். யேசுநாதர் உயிர்த்த ஞாயிறு உலகெங்கும் நாளை கொண்டாடப்படுகிறது. யேசுநாதரை சிலுவையில் அறைந்த ஆணிகள் சிலுவையில் தொங்கவிடப்பட்ட பெயர்ப்பலகை, யேசுநாதரின் சடலம் மூடப்பட்ட சணல்துணி போன்றவை இன்றும்பாதுகாக்கப்பட்டுவருவதுபற்றி இக்கட்டுரையாளர் விளக்குகிறார்.

கிறிஸ்துவின் கடலம் சிலுவையிலிருந்து எடுக்கப்பட்டு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. அதன் பின்னர் தலையில் வைத்த முள்முடிகை, கால்களை அறைந்த 3 ஆணிகள், சிலுவையில் தூக்கிய பெயர்ப்பலகை என்பன எல்லாம் குழிதோண்டப்பட்டுப் புதைக்கப்பட்டன. இவற்றைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று புனித கெலனு பல தொழிலாளருடன் ஈடுபட்டு இம்முயற்சியில் வெற்றியும் கண்டாள்.

### மூன்று ஆணிகள்

3 ஆணிகளில் ஒன்றை புனிதகெலனு தனதுசொந்த ஊரான ஜெர்மனியிலுள்ள 'ரீர்' நகர தேவாலயத்துக்குக் கொடுத்தாள் இரும்புப் பெட்டி ஒன்றில் இது வைத்துக்காப்பாற்றப்பட்டது. 800 ஆண்டுகளாக இப்பெட்டி திறக்கப்படவில்லை. மக்களின் வேண்டுகோளின் பேரில் 1196-ம் ஆண்டளவில் மக்களின் வழிபாட்டுக்கு வைக்கப்பட்டது இந்த ஆணி இன்றுவரை இதே தேவாலயத்தில் இருந்துவருகிறது.

தன்மகனான கொன்ஸ்ரன்டையின் அரசனின் மணிமுடியில் இரண்டாவது ஆணியைப்பதித்து வைத்தாள் 585 ஆண்டுகளாக இந்த அரசபரம்பரையினர் இம்முடியையே அணிந்தனர். ஐரோப்பிய அரசர்பலரும் முடிசூட்டுவிழாவிற்கு இம்முடியையே இரவல் வாங்கினார்கள். நெப்போலியன் கூட வாங்கியதாக வரலாறு கூறுகிறது. இந்த முடி இப்போது இத்தாலி நாட்டில் உள்ள மொன்சா நகரில் உள்ள தேவாலயத்தில் இருந்து வருகிறது.

— இ. பேர்னுட் —

தனது மகனுக்குப் போர்க்களத்தில் தீங்கு ஏற்படாதிருக்க மகனுடைய குதிரையின் கடிவாளத்தில் மூன்றாவது ஆணியைக் கெலனு பதிப்பித்தாள். இதனைக் கொல்லர்கள் இரண்டாகப் பிளந்து கடிவாளத்தின் இருபக்கத்திலும் பதித்துவைத்தனர். பிரான்சில் உள்ள ஆலயம் ஒன்றில் இன்றுவரை அது காக்கப்பட்டுவருகிறது: இவ்வாறிருக்க கிறிஸ்துவை அறைந்த 3 ஆணிகளும் இன்றுவரை பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

### திருமுகத் துகில்

யேசுசிலுவைப்பாதையின் ஊர்வலத்தில் மிகவும் களைத்து இளைத்துச் சென்றபோது வெரோணிக்கா என்றபெண் அவரின் திருமுகத்தைத் துடைத்தாள். அதிசயமான முறையில் அவருடைய திருமுகம் அந்தத் துணியில் பதிந்தது. இந்தத் துணியும் இன்றுவரை டூறீன் நகரில் காப்பாற்றப்பட்டு வருகிறது.

### பரிவட்டச்சீலை

பதின் மூன்றரை அடி நீளச்சணல்துணி: அதன் அகலம் நாலேகால் அடி. யேசுவின் சடலத்தைக் கல்லறையில் மல்லாந்த நிலையில் சணல்துணியில் முதுகுப் புறம் நோக்கி காலின் அடிப்புறமாக பின்னர்தலைப்புறமாக கால்வரை இழுத்துப் போர்த்தினர் யேசுவின் திருமுகம் மேற்படிதுணியில் பதிந்துள்ளது. கீழ்ப்புறம் இருந்த துணியில் முதுகுப்புறம் பதிந்துள்ளது. இன்றுவரை இது 'டூறின்' நகரிலே உள்ள ஆலயம்ஒன்றில் பாதுகாக்கப்பட்டுவருகிறது,

இப்படியாக ஏனைய பல பொருட்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன இவை உள்ளளவும் கிறீஸ்துவுக்கு அழியாத ஞாபகச் சின்னங்களாகச்சாட்சிபகர்ந்து கொண்டேவரும் இவையனைத்தும் உலக மீட்பையும் உலகினை மீட்டகிறீஸ்துவை என்றும் ஞாபகமூட்டிக் கொண்டேவரும்.

கிறீஸ்துடன் நெருங்கிய தொடர்பு கொண்ட இடங்களான பெத்தலகேம், நசரேத், ஜெருசலேம், கானு, கலிலேயா, சமாரியா இன்னும் இவை போன் இடங்கள் பலவும் இன்று புனித இடங்களாகத் திகழ்கின்றன கிறீஸ்துவின் பாடுகளுடன் சம்பந்தப்பட்ட கலவாரி ஜெத்சமணி போன்ற இடங்களும் நீங்கா நினைவுச் சின்னங்களாகத் திகழ்கின்றன இன்றுவரை இவ்விடங்களை யாத்திரிகர்கள் முற்றுகையிட்டவண்ணமேயிருக்கின்றனர்.

# கதை சொல்லும் கல்லறை

— அருள் பிலிப்பையா —

எனது நாடு யூதேயா; நகரம்ஜெருசலேம்; ஊர் கொல்கொத்தா என்னும் குன்றின் அருகாமையிலுள்ள அழகிய தோட்டம் பெயர்...

ஆண்டு சரியாக ஞாபகமில்லை பத்தொன்பதாம்நூற்றுண்டுகளுக்கு முன் என்று நினைக்கிறேன்...... ஒருநாள் வெள்ளிக்கிழமை நண்பகலுக்குப்பின் அரிமெத்தியா ஊர் சூசையின் தலைமையில் ஒருசிறு கூட்டம் என்னை நோக்கி வந்துகொண்டிருந்தது. அக்கூட்டத்தில் பெண்களும் ஒரு சிலர் இருந்தார்கள் என்று நினைக்கிறேன் அவர்கள் கைகளில் வெண்துகிலால் நன்கு சுற்றப்பட்ட நெடிய சடலம் ஒன்று இருந்தது.

பொங்கிப்பூரித்தது வெண்பனித்துகிலால் என்னை அலங்கரித்தனர்.

சுவைமறைவதற்குள் சுமை என்நெஞ்சில் கிடத்தப்பட்டது ஆம் அவர்கள் சுமந்து வந்த சடலத்தை வாயினில் திணித்து நெஞ்சினில் மிகப் பக்குவமாக வளர்த்திவிட்டார்கள் வடித்தார்கள் கண்ணீர் அவர்கள் கண்ணீர் ஆறாய்ஓடி என் அங்கமெல்லாம் நனைந்தபின்னர் தான் என் [illegible]ந்தனை திரும்பியது.

யார் இவர்கள்? ஏன் இப்படி அழுகிறார்கள்? இச்சடலம் யாருடையது? விடை கிடைக்கா[illegible] அப்[illegible] என[illegible] வாய் மூடப்பட்டது [illegible]கிக்கொள்ள முடியவில்லை. பேசவும் முடியவில்லை. என்னால் என்ன செய்யமுடியும். அடங்கிவிட்டேன்.

ஆனால் என் சிந்தையை முறுக்கிவிட்டேன், அடங்கவில்லை, அடங்கும் ஆசையால் துள்ளி எழுந்தது சிந்தை. யாருடையது இச்சடலம்? இதற்கேன் இந்தக் காவலர்? எங்கெல்லாமோ விடைதேடிப் பறந்தது என் சிந்தை. சிந்தையே முந்திக்கொண்டு ப[illegible]து விட்டான் கதிரவன். அவனுக்கு என்மேல் கோபம் போலும்.

[illegible]ப் பறக்க முடிய [illegible]ட்டிக்கொண்டேன் மீண்டும் காவலடும் உ[illegible]

மாக நின்றனர். வந்தவர்களுள் ஒருவன் என்மேல் மூடப்பட்டிருத்த பாறுங்கல்லில் உதைத்தான். உரக்கக் கூவினான். அவன் சொன்னதை என்னால் தீர்மானிக்க முடியவில்லை.

''கடவுளின் குமாரன் என்றான், மரித்த மூன்றாம் நாளில் உயிர்த்தெழுவேன் என்றான், இந்தக் கஉலறையுள் இருந்து இவன் எப்படி உயிர்த்தெழுகிறான் பார்ப்போம். நீங்கள் கவனமாயிருங்கள்'' என்று கர்ச்சித்தான். கர்ச்சித்த மறுகணமே சென்றுவிட்டான் வந்தவர்களும் அவன் பின்னே சென்றனர்.

வழிமேல் விழிவைத்தேன். அவர்கள் உருவம் மறைந்துவிட்டன. ஆனால் அவர்கள் கூறிய ''வார்த்தையின் வடிவம்'' மறையவில்லை. சற்றும் குறையவில்லை.

கடவுளின் மகன் மரித்த மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன்' ஆமாம் நான் ஏப்ப[illegible] இச்சடலம் - இவன்

# நாட்டிலும் நகரிலும்

சில தினங்களுக்கு முன்பு எமது கிராமத்திலுள்ள ஒரு பலசரக்கு கடையில்இரண்டு டோர்ச்லைட் பாட்டரிகள் வாங்கினேன். மிகவும் பிரபல்யமான ஓர் இனத்தைச் சேர்ந்த பாட்டரிகள். எண்ணி மூன்றே மூன்று நாட்கள் மிகவும் பிரகாசமான ஒளியை அவை தந்தன. நான்காம் நாள் இரவு டோர்ச்சை எடுத்து அடித்தபோது என்ன ஆச்சரியம், தூர்ந்துபோன தீக்குச்சியைப் போல பல்பு மின்னியது! இத்தனைக்கும் நான் இரவு முழுவதும் டோர்ச் அடித்துக் கொண்டு திரிபவனுமல்ல. ஆகக்கூடியது அந்தப் பாட்டரிகள் பத்து நிமிடங்களுக்கும் எரிந்திருக்காது. அடுத்த நாள் பாட்டரி தந்த கடைக்காரனிடம் எனது முறைப்பாட்டை தெரிவித்தேன். 'நான் என்ன செய்யலாம், ஸ்டோரில் வாங்கியதைத்தான் உங்களுக்கு விற்றேன்' என்றான் கடைக்காரன். ஸ்டோரில் போய் விசாரித்தால் 'நாம் என்ன செய்வோம், கொம்பனி அனுப்பியதைத்தான் நாங்கள் விற்கிறோம்' என்ற பதில் நிச்சயமாகக் கிடைக்கும் என்று தெரியுமாதலால் அத்துடன் நிறுத்திக் கொண்டு டோர்ச் இல்லாமல் வசிக்கக் கற்றுக் கொண்டேன்.

கலப்படத் தந்திரம் டோர்ச்லைட் பாட்டரிகள் வரை வந்துவிட்டது. உயிரற்றுப் போன பழைய பாட்டரிகளுக்கு ஏதோ ஒரு 'திருக்கீஸ்' செய்து சில நிடங்களுக்கு மட்டும் புதியவை போல தோற்றும்படி செய்து விடுகிறார்கள்: யார் செய்கிறார்கள் என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்! பாலுக்குள் தண்ணீர், தேனுக்குள் சர்க்கரை, நல்லெண்ணைக்குள் கடலை எண்ணை, மிளகாய்த்தூளுக்குள் செங்கட்டித்தூள் இப்படியே கலப்பட வியாபாரம் பல்கிப் பெருகி சுபீட்சமாக முன்னேறிக் கொண்டு போகிறது:

பொதுத் தேர்தல் நெருங்கி வந்துவிட்ட இந்த சமயத்தில் அரசியலிலும் இந்தக் கலப்பட வியாபாரம் வந்து விடுமே என்று பொதுமக்கள் கவலைப்படுவது இயல்பு' அபேட்சகர்களை தெரிவு செய்யும் கட்சித் தலைவர்கள் சில திறம் 'காய்'களுடன் சில போலி 'காய்'களையும் சேர்த்துக் கட்டி வாக்காளர்களுக்கு படைப்பதே இந்தக் கவலை. எல்லாக் கட்சிகளுக்கும் இது பொருந்தும்.

சில தொகுதிகளில் சில கட்சிகளுக்கு அசைக்க முடியாத செல்வாக்கு இருக்கிறது. கட்சியின் பெயரில் ஒரு மரக்கட்டையை நிறுத்தினாலும் வாக்காளர்கள் அதற்கு வாக்களிக்க சித்தமாயிருக்கிறார்கள். இந்தச் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு கட்சித் தலைவர்கள் திறமையற்றவர்களையும் ஆற்றல் குன்றியவர்களையும் கட்சி அபேட்சகராகத் தெரிவுசெய்து விடுகிறார்கள். கட்சியின் பெயரால் வெற்றியீட்டும் இவர்கள் ஆட்சிமன்றத்தில் கட்சிக்காக கைஉயர்த்துவதோடு தங்கள் கடமையை முடித்துக் கொள்வார்கள். தமது தொகுதியைப்பற்றியோ தம்மை தெரிவு செய்து அனுப்பிய வாக்காளரைப்பற்றியோ அவர்களுக்கு அக்கறையோ சிந்தனையோ வரமாட்டாது. தேர்தலுக்கு முன் தமது தொகுதியில் நடக்கும் செத்தவீடு, கல்யாண வீடுகளுக்கு தவறாமல், அழையாமல் சமுகம் தருவார்கள். தேர்தல் முடிந்த பின்பு அவர்களை வலைவீசித்தான் பிடிக்க வேண்டும்.

ஆட்சிமன்றத்துக்கு தெரிவு செய்யப்படுபவர் முதலாவதாக தமது தொகுதி மக்களுக்கு கடமைப்பட்டவர். இரண்டாவதாகத்தான் கட்சி அபிமானம் வர வேண்டும். தொகுதியிலும் ஒரு பகுதி மக்கள் தமக்கு ஆதரது தராமல் வேறு கட்சிக்கு வாக்களித்தார்கள் என்று தெரிந்தாலும் அவர்களுடைய நலன்களைக் கவனிக்காமல் விட்டுவிடக்கூடாது. தெரிவு செய்யப்பட்ட பின்பு தாம் தமது தொகுதி மக்கள் எல்லோரினதும் பிரதிநிதி என்ற நினைவு அவரைவிட்டு அலலப்படாது.

அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்கும் கட்சித்தலைவர்களுக்கு மகத்தானதொரு பொறுப்பு இருக்கிறது. கட்சியை நம்பியிருக்கும் பொதுமக்களை அவர்கள் கைவிடப்படாது. அபேட்சகர் கட்சிக்கு விஸ்வாஸமானவர் என்றால் மட்டும் போதாது. ஊக்கமும் ஆற்றலும் மக்களுக்கு தொண்டு செய்யும் ஆர்வமுமே அபேட்சகரின் முக்கிய தராதரங்கள்,

கலப்படம் என்பதே இருக்கப்படாது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நமது நாட்டில் இப்போது ஆட்சிமன்றம் கலைக்கப்பட்டு இன்னும் இரண்டு மாதங்களில் தேர்தல் நடைபெற விருப்பதால் வகுப்புத் நேர்மையாகவும் நடைபெறுவது அபேட்சகர்களின் கையிலேயே பெரிதும் தங்கியிருக்கிறது.

## ஏன் இந்த அநியாயம்?

சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின்மீது கொழும்பு கும்பனித்தெரு தடுப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்த எஸ். எம், இஸ்மாயில் என்பவர் சந்தேகாஸ்பதமான முறையில் மரணமடைந்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இந்த மரணம் பற்றி விசாரணை நடைபெறும். தீர்ப்பும் கூறப்படும். அதுவேறு' விஷயம்

இறந்த இஸ்மாயில் 8 மாதங்களாக இந்தமுகாமிலிருந்திருக்கிறா. சிலர் ஒரு வருடம்கூட முகாமிலிருக்கின்றனராம். இந்த தடுப்பு முகாம்களில் கொடுக்கப்படும் உணவு அவர்களின் நிலைமை ஆகியவை பற்றிப் பலரும்பல தடவைகளிலும் எடுத்துக் கூறியிருக்கின்றனர்,

நாமும் இதே பத்தியில் இதற்கு முன்னரும் எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டு இந்த முகாம்களில் அடைக்கப்பட்டால் அவர் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்தானு என்பதைதீர விசாரித்து அவர் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்தான் என்பது நிரூபிக்கப்பட்டால் அவரை அந்த முகாமில் அதிக நாள் வைத்திருக்காமல் விரைவாக நாடுகடத்திவிடவேண்டும். இந்தவிஷயத்தில் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகமும்சுறுசுறுப்பாக இயங்க வேண்டியது அவசியம்

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களும் மனிதர்கள்தான் அவர்களை மனிதாபிமானத்துடன் நடத்த வேண்டியது மனிதப்பண்பு. அனியாயமாக முகாமுக்குள் சித்திரவதைப்பட்டு உயிர் விடுவது நமது நாட்டின் நற்பெயருக்கு மட்டுமல்ல இந்தியாவின் நற்பெயருக்குமே நல்லதல்ல. இலங்கைஇந்திய அரசாங்கங்கள் இது விஷயத்தில் கவனம்செலுத்த வேண்டும்.

## சங்கானை கூ. சங்க வெள்ளிவிழா

### இன்றைய நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், சனி

சங்கானை கிழக்கு மத்திய பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வெள்ளிவிழா இன்று மாலை ஆரம்பமாகி தொடர்ந்து 3 நாட்களுக்கு அரசடி வைரவர் ஆலய முன்றலில் நடைபெறும்.

இன்றை நிகழ்ச்சிகள் திரு ஏ. ஈ. இரத்தினசாமி தலையில் நடைபெறும் மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் விழாவில் அடுத்து கரபந்தாட்டப்போட்டிகள் நடைபெறும். பிரதம விருந்தினராக திரு. வி. கனகசபை கலந்து கொள்கிறார். திரு வி. இராஜசுந்தரம், திரு எஸ். கே. திருச்சிற்றம்பலம் ஆகியோர் உரைநிகழ்த்துவர். நல்லூர் நகைச்சுவை நாடகமன்றம் அளிக்கும் 'தம்பிகொழும்பிலே' நகைச்சுவை நாடகமும், நடன நிகழ்ச்சியும் விழாவின் இன்றைய இறுதிநாள் நிகழ்ச்சிகளாக அமையும்.

## 'கல்வியின் குறிக்கோள்'

குருணுகல், வெள்ளி

இன்று தொழில் பெறுவதையே நோக்கமாகக் கொண்டு கல்வி கற்கின்றனர். இந்த நோக்கத்தை கற்போர் முக்கியமானதாகக் கொள்ளக் கூடாது. கல்வியின் குறிக்கோள் வேலைவாய்ப்பு பெறுவதல்ல ஆனுல் நம் நாட்டுக்குத் தேவையான நல்லதொரு சமூகத்தை உருவாக்குவதேயாகும்.

தல்கஸ்பிட்டிய அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்தின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்துப்பேசிய மாவத்தகமைக் காரியாதிகாரி திரு டபிள்யு. எஸ், ஹூலு கல்லே மேற்கண்வாறு குறிப்பிட்டார்.

இவ் வைபவத்தில் குருநாகல் வட்டாரக் கல்வியதிகாரி ஜனுப் எச்.எம்.பசீர் குருநாகல் மாவட்டக் கல்வி ஆலோசகர் திரு விஜயசிறி உட்படப் பலர் உரையாற்றினர்.

நோக்கி வந்துகொண்டிருந்தது. அக்கூட்டத்தில் பெண்களும் ஒரு சிலர் இருந்தார்கள் என்று நினைக்கிறேன் அவர்கள் கைகளில் வெண்துகிலால் நன்கு சுற்றப்பட்ட நெடிய சடலம் ஒன்று இருந்தது.

நிஷ்டையில் இருப்பவன் போல் பாசாங்கு செய்து அரைக்கண்ணுல்நடப்பதைக் கவனித்தேன். என்னே கொடுமை என்வாய் திறக்கப்பட்டது ஆடாது அசையாது அமைதியாயிருந்தேன் என்ன தாராளசிந்தை ஏராளமாக ஊற்றினர் வித விதமான பரிமள தைலங்களை எனக்கு ஒரே ஆனந்தம் உமிழ்ந்து உருசிபார்த்து விழுங்கினேன் என் இதயம் குளிர்ந்தது அங்கமெல்லாம் என்..ந்தனை இரும்பியது.

யார் இவர்கள்? ஏன் இப்படி அழுகிருர்கள்? இச்சடலம் யாருடையது? விடை கிடைக்காது உழன்றேன் அப்..து திறக்கப்பட்ட என.. வாய் மூடப்பட்டது பலமாக மூடப்பட்டது அவ்வேளை கையில் சட்டியுடன் போராயுதங்களுடன் யூத கர்வலர் இருவர் வந்தனர் சூசையை ஏதோ கேட்டனர் அவர்களது மொழியும் புரியவில்லை பேச்சும்கேட்கவில்லை காவலர் வந்த மறுகணமே கூட்டம் அங்கிருந்து கலைந்தது. எனது வாய் சோதனை செய்யப்பட்டது பக்கத்தே இருந்த பாருங்கல் என்வாயில் வந்து குந்திக்கொண்டது. என்னுல் பாரத்தைத் தாங் முந்திக்கொண்டு ப..து விட்டான் கதிரவன். அவனுக்கு என்மேல் கோபம் போலும்.

ஒளியின்றிப் பறக்க முடியவில்லை. ஒட்டிக்கொண்டேன் மீண்டும் காவலரும் உ..கி விட்டனர்.

பொழுது விடிந்தது. காவலர் விழித்தனர். சுற்றுப்புறங்களில் நோட்டம் விட்டனர் பாருங்கல்லை அசைத்துப் பார்த்தனர். திருப்தியாகவிருந்தது. பகல் கரைந்துகொண்டிருந்தது. தலைமைக் குருக்கள் - அதிகாரிகள் - மூப்பர்கள் வந்தனர். பலமுறை என்னைச் சுற்றினுர்கள். துரும்பு நுழையக்கூடிய அளவிற்கூட என் வாய் திறக்கப்படவில்லை. காவலர் கம்பீர ...ட்டன. ஆனுல் அவர்கள் கூறிய ''வார்த்தையின் வடிவம்'' மறையவில்லை. சற்றும் குறையவில்லை.

கடவுளின் மகன் மரித்த மூன்ரும் நாள் உயிர்த்தெழுவேன்' ஆமாம் நான் ஏப்பமிட்ட இச்சடலம் - இவன் கடவுளின் மகனு? கர்த்தரின் குமாரனு? பிதாவின் சுதனு சுழன்றதுஎன்சிந்தை திசை தெரியாது சுழன்றது.

மறுநாள்......இரவு.........

அமைதியாய் உறங்கிக் கொண்டிருந்தேன். நடு நிசி ஆட்டங்கண்டது என் அங்கம்' நாட்டங் கொண்டேன் நடப்பதைப் பார்க்க,

என் வாயின் கனம்குறைந்தது. கயவரால் கல் புரட்டப்படுகின்றதோ என்ற சந்தேகங்கூட எழுந்தது, இருந்தும் அமைதியாக இருந்தேன், என்ன ஆச்சரியம். எங்கும் ஒரே ஒளிமயம், எண்ணத்தால் எழுத முடியாத வண்ணத்தால் வடிக்க முடியாத பிரகாசம் என் வாயினூடாக வந்த ஒளிஉள்ளத்துள் நிறைந்து வழிந்தது. என்னே வியப்பு.' என் வாய் தானகத் திறந்து கொண்டது, திகைத்தேன் செய்வதறியாது மலைத்தேன்

என்னுள் கிடந்த சடலத்தின் துகில் கலைந்தது உயிர் பெற்றது, சுடர்விட்டது, அஞ்சி அடங்கினேன் நான், ஆண்டவன் மகன் இவர்என நிட்சயித்தேன்' என் நெஞ்சத்தை நிமர்த்தி நின்றேன்,

வெற்றிபெற்ற வீரனைப் போல் விண்ணேக்கிச் சென்ருர் அவர், அவரை என் கண்ணேக்கிச் சென்றது. கிட்டவில்லை, அவர் எட்டச் சென்றுவிட்டார். என் முன்னவருக்கும் பின்னவருக்கும் கிடைகக — கிடைக்க முடியாத பேறு — பெருமை எனக்கு கிடைத்தது. அதனுல்தான் இன்றும் 'கதை சொல்லும் கல்லறை' யாகி நிற்கின்றேன் யான்.

..ம் ...ந்து ... பொதுமக்கள் கவலைப்படுவது இயல்பு' அபேட்சகர்களை தெரிவு செய்யும் கட்சித் தலைவர்கள் சில திறம் 'காய்'களுடன் சில போலி 'காய்'களையும் சேர்த்துக் கட்டி வாக்காளர்களுக்கு விற்றுவிடுவார்களோ என் என்றால் மட்டும் போதாது. ஊக்கமும் ஆற்றலும் மக்களுக்கு தொண்டு செய்யும் ஆர்வமுமே அபேட்சகரின் முக்கிய தராதரங்கள்,

கலப்படம் எல்பதே இருக்கப்படாது.

—வழிப்போக்கன்

# “நாட்டின்நீர், நிலவளத்துக்கேற்ற பொருளாதாரத்திட்டம்வேண்டும்”

## கனிஷ்ட பல்கலைக்கழக அதிபர் பேச்சு

மாவிட்டபுரம், வியா

'எமது நாட்டின் நிலவளம், நீர்வளம் சீதோஷ்ண நிலையத்திற்கேற்ற பொருளாதாரத் திட்டம் ஒன்று முதலிடம் பெற்று நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். நாட்டைப்பற்றிய பூரண அறிவைப் பாடசாலைக்கு அளிக்கும் நோக்கத்துடன் பாடத்திட்டத்தை அமைக்க வேண்டும். இத்திட்டம் பொருளாதார சமூக அரசியல் ஆராய்வால் ஆக்கப்பட்டு நாளாந்த கருமங்கள் மூலம் மாணவரால் கிரகிக்கப்பட வேண்டும்.'

இவ்வாறு தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி பெற்ருர் தினவிழா, கனிஷ்ட பாடசாலை பரிசளிப்புவிழா ஆகியவற்றில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட பலாலி கனிஷ்ட பல்கலைக் கழக அதிபர் திரு. கே. கந்தசாமி கூறிஞர்.

கல்லூரி திறந்தவெளியரங்கில் அதிபர் தெ. து. ஜெயரத்தினம் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

எங்கள் பிள்ளைகள் தமது பாடசாலைகள் மூலம் பாட அறிவையும் சில திறமைகளையும் பண்புகளையும்பெற்றிருந்தாலும் எங்கள் சமூகத்தின் விருத்திக்கும் முன்னேற்றத்துக்குமாகவும் பணி புரிய வேண்டியவர். இவர்கள் இப்பணியைச் செய்வதற்குத் தகுந்தமுறையில் வழிகாட்டப்பட வேண்டும். இவர்களில் தேசப்பற்றும், ஆர்வமும், ஊக்கமும் விளைந்தாலேயன்றித் தகுந்த மனிதராக விருத்தியடைய மாட்டார்கள். ஆகவே எமது சிருர் நாட்டின் சரித்திரத்தையும் கலாச்சாரத்தையும் அதன் அமைப்பையும் சமூகஇயக்கத்தையும் பற்றி முறையான அறிவைப் பெற்றுத் தங்கள் சமூகமானது. சென்ற ஐம்பது வருட காலத்திலுள் கல்வியிலும், பண்பிலும் பொருளாதார அரசியலிலும் எவ்வித மாற்றம் அடைந்திருக்கிற தென்பதைச் செவ்வனே உணர வேண்டும்.

### கல்வியில் முன்னேற வேண்டும்

எங்கள் சமூகத்தின் விருத்தி கல்வியிற்தான் அதிகம் தங்கியுள்ளது. பிரதம கனிட்ட, உயர்தர பாடசாலைகள் நாட்டின் கல்வித் தேவைக்குரிய மாதிரிப் புள்ளிவிபரங்கள் மூலம் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட வேண்டும். இவைகளை ஒரு பிள்ளையாவது ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்தரக்கல்வி வரையும் தனது பிறப்பிடத்திலேயே பெறக்கூடியதாய் ஸ்தாபிக்கப்பட்டு தனது சிறந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு தளபாடங்கள், விளையாட்டிடங்கள், ஆய்வுகூடங்களுடையனவாயிருக்க வேண்டும். இவைகளை நல்ல முறையில் நடத்துவதற்குரிய கல்விக் குழுக்கள் சமுகத்தால் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். பாடவிதானமானது பழையது புதுப்பிக்கப்பட்டு நாட்டின் தேவைக்கேற்ப நாஞவித பாடங்கள், முயற்சிகள் கொண்டதாய் உருவாக்கப்பட வேண்டும். பாடசாலைப் பிள்ளைகள் தமது கிராமத்திலுள்ள ஆலயங்களில் தொண்டு புரியவும், விழாக்களிற் பங்குபற்றவும் பயிற்சி பெற வேண்டும். கிராமத்தில் ஏற்படும் மண, மரணச் சடங்குகள், சமூக கொண்டாட்டங்கள், கிராமப் பாதுகாப்பிலெல்லாம் முறையாய்ப் பிள்ளைகள் பங்கு பற்ற வேண்டும்.

எங்கள் பிள்ளைகளின்மேற்படிப்புக்கு வேண்டிய கழகங்கள் உடனடியாய் ஸ்தாபிக்கப்பட்டாலேயன்றி, இவர்களைக் கற்பிப்பதற்குரிய பேராசிரியர்கள் இன்னும் 5 வருடத்திற் பெறுவது கஷ்டத்திற் கஷ்டமாகமாகவிருக்கும். இப்போ பல துறைகளிலும் சிறந்த பட்டதாரிகள் இருக்கின்ருர்கள். இவர்களுடைய சேவை இப்பல்கலைக்கழகத்திற் தேவைப்படும். ஆங்கிலஅறிவும் மற்றச் சமுகத்தின் பாஷையறிவும் மிக அத்தியாவசியமானவை. அன்றேல்எமது அயல் நாட்டவருடனும் பிறதேசத்தாருடனும் இணங்கி வாழ்வது கஷ்டமாயிருக்கும். ஆங்கிலம் அல்லது ருஷியன் பாஷை அறிவு இந்நாட்களில் விஞ்ஞான உலகம் விளங்குவதற்குப் பெருந்துணையளிக்கும்.

## இந்துமாமன்றத்தின் 15-வது ஆண்டு பூர்த்தி

கோட்டை, சனி

அகில இலங்கை இந்து மாமன்றம் தனது 15 வது ஆண்டு நிறைவு மகாசபைக் கூட்டத்தை கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நேற்று கூட்டியது இக் கூட்டத்தில் 18 பிரேரணைகள் கொண்டுவரப் பட்டன இவற்றுள் 12 பிரேரணைகள் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றன. இந்து மாமன்றத்தில் இப்பொழுது 83 சங்கங்கள் அங்கம் வகிப்பதாக மன்றத்தின் ஆண்டறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## வலிப்பு நோயால் மரணம்

புலோலி, வெள்ளி

நாகர்கோவிலைச் சேர்ந்த செல்வரத்தினம் தெய்வானைப்பிள்ளை (வயது 42) திடீரென ஏற்பட்ட வலியினுல் மரணமாஞர். திடீர் மரண விசாரணையின்போது இறந்தவருக்கு அடிக்கடி வலிப்பு நோய் காணப்படுவதாக இறந்தவரின் கணவர் தெரிவித்தார். மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் திடீர் மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## முன்னுள் மந்திரி திறந்து வைக்கிருர்

கைதடி, வெள்ளி


சாவகச்சேரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பஸ் நிலையத்தை இன்று முன்னுள் உள்ளூராட்சி மந்திரி திரு. எம் திருச்செல்வம் திறந்துவைப்பார்.

சாவகச்சேரி நகரசபையினரால் நிர்மாணிக்கப்பட்டுள்ள இப்புதிய பஸ் நிலையத்தில் பிரயாணிகளுக்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

நகரசபைத் தலைவர் திரு, சு. கனகரத்தினம் தலைமையில் இத்திறப்பு விழா நடைபெறவிருக்கிறது.

யாழ் பஸ்டிப்போ அத்தியட்சகர் திரு எக்ஸ் சுவாம்பிள்ளை உட்பட இலங்கை போக்குவரத்துச் சபை உத்தியோகஸ்தர்கள் இவ்விழாவில்கலந்து கொள்ளவிருக்கின்றனர்:

## 27 வருட சேவை



யாழ்ப்பாணம் சுங்க இலாகாவில் கடமையாற்றிவந்த திரு. லூயிஸ்விக்டர் இம்மாதம் 30-ம் தேதி ஓவ்வுபெறவிருக்கிருர். யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த இவர் 27 ஆண்டுகளாகச் சுங்க இலாகாவிலும், அதற்கு முன்னர் சில ஆண்டுகளாக உணவுக் கட்டுப்பாட்டுஇலாகாவிலும் கடமையாற்றியுள்ளார்.

யாழ்ப்பாண சுங்க காரியாலயத்திலேயே தனது சேவையனைத்தையும் தொடர்ந்து செய்ததுடன், அங்குகடமையாற்றும், அதிகாரிகளினதும் உத்தியோகத்தினரதும் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றுவந்துள்ளார்.

யாழ். குருநகரைச் சேர்ந்த ஶ்ரீமன் கத்தோலிக்க குடும்பத்தைச்சேர்ந்த இவர் அநேக கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு பெருந்தொண்டுகள் செய்ததுடன், பொருளுதவியும்செய்துள்ளார். கிறிஸ்தவ மதகுருமார்களின் நன்மதிப்பையும் அன்பையும் பெற்றிருக்கிருர்.

## 4 தமிழ்த்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரத்தை தாக்கல் செய்வர் யாழ். அரசாங்கசெயலக கட்டடம்: வட்டுக்கோட்டை உடுவில், நல்லூர், கோப்பாய், யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, காங்கேசன் துறை யாழ். பழைய கச்சேரி கட்டடம்: உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி, மன்னர் கச்சேரி: மன்னர், வவனியா கச்சேரி: வவனியா, திருக்கோணமலை நகரசபை மண்டபம்: திருக்கோணமலை, மூதூர், மட்டக்களப்பு கச்சேரி: மட்டக்களப்பு, கற்குடா, பட்டிருப்பு அம்பாறை ஆற்றுப்பள்ள தாக்கு அபிவிருத்திசபை காரியதரிசியின்காரியாலம்ம் கல்முனை, நிந்தாவூர், பொத்துவில், அம்பறை.

சுழிபுரம், வெள்ளி

பனிப்புலம் அம்பாள் மகா கும்பாபிஷேகம் நேற்றைய தினம் நடைபெற்றது. பிரம்மஶ்ரீ ச குமாரசாமிக்குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடந்தது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பதினுங்கு தினங்கள் அபிஷேக ஆராதனைகள் நடைபெற ஏற்பாடாகவுள்ளன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org